ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

இவை
ஸ்ரீமத்
மா. தங்கவேலு
கிராமணியார்
அவர்களால்
இயற்றப்பட்ட

# பாரத சுபத்ரா பரிணய நாடகம்.

ஸ்ரீமத்
மா. தங்கவேலுகிராமணியாரிடம்
சகல சுதந்திரம் பெற்று
கை. சு. துரைசாமிமுதலியார்,
அவர்களால்

சென்னை:—ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ்.

ரிஜிஸ்டர்ட் காபி ரைட்.

இதன் விலை] 1927 [அணா 12

OFFICE OF THE REGISTRAR
30 APR 1927

O-,892M1V3B
N27
85892

உ

கடவுள் துணை.

# பாரத சுபத்ரா பரிணயநாடகம்.

இவை
செய்யாறு தாலூக்கா நெம்மலி கிராமம்
வித்வான்
ம-ா-ா-ஸ்ரீ நே. சே. மாசிலாமணி கவிராயரவர்கள்
குமாரரும்
ஷை ஊர் கவிதிலகம்
பிரம்மஸ்ரீ வே. கிருஷ்ணமாசாரியரவர்கள்
மாணுக்கரும்
ஷை தாலுக்கா புதுப்பாளையம்
சமரஸசன்மார்க்க சங்க அங்கத்தினரும்
ஆகிய
ஸ்ரீமத் மா. தங்கவேல்கிராமணியார்
அவர்களாலியற்றப்பட்டு
ஷை சங்க காரியதரிசியும் கவிராஜரும்
ஆகிய
ஸ்ரீமான் ப. மாசிலாமணி முதலியார்
அவர்களால் பரிசோதிக்கப்பட்டு

ஷை ஸ்ரீமத் மா. தங்கவேல்கிராமணியாரிடத்துல்
சகலசுதந்திரம் பெற்றுக்கொண்டு,
**கை. சு. துரைசாமிமுதலியாரால்**

சென்னை:— ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ்ஸில் 1-வது 2-வது பாடம்
பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்.

இரண்டாம்பதிப்பு காபி 2000] 1927 [இதன் விலை அணு 12

OFFICE OF THE REGISTRAR
30 APR 1927
MADRAS
2996
89

O-,892MTV3,B
N27

85892

30 APR 1927
MADRAS

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலகனதனவான்களுக்கும் அச்சுக்கூட்டத் தலைவர்கட்கும் அறிவிப்பது யாதெனில், இந்த பாரத சுபத்திரா பரணியநாடகம் என்னும் நூலை அமைத்த செங்காடு, ம-ா-ா-ஸ்ரீ தங்கவேலு கிராமணியார் இந்நூல்விஷயமாயுள்ள சர்வசுதந்தரங்களையும் 1926ஞு ஏப்பரல்மீ அடியிற் கையொப்பமிட்டிருக்கும் என்னால் சகலசுதந்திரத்துடன் விற்பனைக்கு பெறப்பட்டு இரண்டாம்பதிப்பு பதிப்பித்து ரிஜிஸ்டர் செய்திருப்பதால் பிரிட்டிஷ் இலாக்காவிலும் பிரான்சு இலாக்காவிலும் என்னிட அனுமதியில்லாமல் யாரேனும் அச்சிடுவார்களேல் ஷை காபிரைட் ஆக்ட்படி கிரிமினல் குற்றத்துக்கும் நஷ்டத்துக்கும் ஜவாப்தாரிகளாக வேண்டுமென்பதை இதனால் அறிவிக்கப்படுகின்றது.

இப்புத்தகம் வேண்டியவர்கள் சின்னகாஞ்சீபுரம் நெமந்தக்கார தெருவு 45-வது நெம்பர் வீடு ம-ா-ா·ஸ்ரீ சுப்பிரமணிய முதலியார் அவர்களிடத்தில் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகம் 1-க்கு விலை அணா—12.

வி. பி. தபால் சார்ஜ் அணா—4.

இப்படிக்கு,

**கை. சு. துரைசாமி முதலியார்.**

# முகவுரை.

அன்பர்காள்!

பூவுலகில் மனிதராய்ப் பிறந்தார் ஒவ்வொருவரும் அறிந்தொழுகியடையவேண்டிய விஷயங்களனைத்தும் தன்னுளடங்கப்பெற்று, தான் பிறிதொன்றன் சகாயத்தை யபேக்ஷியாது தனிப்பெருந்தகையாய் பாஷைக் கரசாய்ப் பொருந்தி சிறந்து விளங்குவது நந்தமிழ்ப்பாஷை யொன்றே ஆதலின் இப்பெருந்தரையவர்களும் இதனை அருந்தமிழென்றழைக்கின்றனர் என்பது அறிஞர் பலரும் ஒப்பமுடிந்ததோர் விஷயமாம்.

அங்கனம் சகல விஷயங்களையும் தன்னுளடங்கப்பெற்றிருக்கினும், அவைகள் பாக்கள், சூத்திரங்கள் முதலியப் படிவங்களாகப் பெரும்பான்மையும் பதிந்திருத்தலின், அவற்றிற் சிந்தையை சிந்தாதிறக்கி நலனடைவது சிலர்க்கே சாத்தியமாவதன்றி, பலர்க்கும் பயன்படாது போவதை நோக்கி பேதைகட்கும் பெண்கட்கும் உரித்தாமாறும், இயல், இசை, நாடகமென்னு முத்தமிழதனில் எளியநடையுடையதாகிய நாடக நடையில், அறம், பொருள், இன்பங்களின் கூறுபாட்டை யாவரும் நன்கறிந்தொழுகுமாறு அமைப்பதே தகுதியாமென தற்கால வறிஞர்களால் ஆமோதிக்கப்படுவதாலும், நம்மவரொவ்வொருவரும் இம்மை, மறுமை, வீடு யென்னு முத்திறப் பயனையும் அறிந்தொழுகியடையும் வண்ணம் அநேக நீதிகட்குறைவிடனாகிய இச்சரிதத்தைக் காலதேசவர்த்தமானங்களுக்கேற்ப இராகதாள நூதன வர்ணமெட்டுகளுடன் பாமரர் முதல் பண்டிதரீறாகவுள்ள யாவருக்கும் பயன்படுமாறு நாடகரூபமாயியற்றப் பட்டது.

முன்னரே இச்சரிதத்தைப் பலர் நாடகரூபமாயியற்றப் பட்டுளரேனும் அவை காலதேச வர்த்தமானங்களுக்கேற்க எளிய நடையில் அமைக்கப்படாததாலும் சில நண்பர்கள் தற்கால வியல்பிற்கேற்ப அமைத்துத்தரும்படி கேட்டுக்கொண்டதினாலும் இதை இயற்றப்பட்டது.

இந்நூலின் கதாநாயகி சுபத்திரை யாதலினாலும் கதையின் முக்கிய நோக்கு விவாக விஷய மாதலினாலும் (இப்பெயர் வாய்ந்த, ஸ்ரீகள் இருக்கினும்) ஈண்டு கூறும் சுபத்திரைப்பாரத சுபத்திரை யாதலாலும் இந்நூலுக்குப் பாரத சுபத்திரா பரிணயநாடகமென மகுடம் சூட்டப் பட்டது.

இந்நூலொன்றைக் கண்ணுறுவதாலேயே கண்ணபிரானுடைய அகடிதகடனா சாமர்த்தியமும், அவரும் அருச்சுனனும் அடிக்கடி தங்களுக்குள் காட்டும் அன்பின் பெருக்கும், சுபத்திரை விஜயனிடம் பூண்டுள்ளக் காதலும், கற்புவழாத்தன்மையும், துறவின் றூய்மையும், இன்னுமிதுபோன்ற அரிய பெரிய நீதிகளும், பொருந்தியுள்ளன வென்பது

வெள்ளிடைமலையாம். ஆகவே இதனைக் கருதிப் பார்ப்பவர்கள் பரஸ்பரம் நற்குணமனைத்தும்பெற்று நல்லனயாவும் பெறுவரென்பது திண்ணமாம்.

எனது உரிய தந்தையும் கால தேச வர்த்தமானங்களுக்கியைய நூதனவர்ணமெட்டுகளுடன் தற்காலம் உலகமெங்கும் உலவி வரும் சிறுத்தொண்ட நாடகமாதி பலநாடக நூலாசிரியரும் ஆகிய காலஞ்சென்ற நெ. செ. மாசிலாமணி கவிராயரவர்களின் ஞாபகார்த்தமாக இந்நூலியற்றிவெளியிடப்பட்டது.

இந்நூலை, இலக்கண விலக்கியங்களுக்கியைய பிழையறப்பரிசோதித்துத்தந்த, செய்யாறுதாலுக்கா புதுப்பாளையம், சமரஸ சன்மார்க்கசங்க (லைபரெரி) போதகாசிரியரும், காரியதரிசியும் ஷெடி யூர் போர்டு ஸ்கூல் உதவி உபாத்தியாயரும், அத்வைதானுபவியுமான, தமிழ்ப் பண்டிதர், ஸ்ரீமான் ப. மாசிலாமணி முதலியார் அவர்கட்குத் திரிகரணத்தூய்மையான வந்தனத்துடன் எக்காலும்நன்றி பாராட்டக் கடமைப்பூண்டுளேன்.

இந்நூல் யாதோரிடையூறுமின்றி வெளிவரத்தயை புரிந்த எல்லாம் வல்ல இறைவன் இது எஞ்ஞான்றும் நிலவுமாறும், இதை நடிப்பவர்கட்குச் சகல சம்பத்தும் அளிக்கத் திருவுளங்கனியும்படியும், அவர் பாதாம் புயங்களை சந்ததம் சிந்தியாநின்றனம்.

இங்ஙனம்:
அடியார்க்கடியன்,
மா. தங்கவேலு கிராமணியார்.

## சிறப்புக்கவிகள்.

சென்னை திருவல்லிக்கேணி கார்பொரேஷன்
மாடல் ஸ்கூல் ஹெட்மாஸ்டரும்
புதுப்பாளையம் சமரஸ சன்மார்க்க சங்க
அக்ராசனருமாகிய
**பிரம்மஸ்ரீ ந. சுப்பிரமணியஐயரவர்களியற்றிய**

### விருத்தம்.

சீர்மலி செமலிச் செறிந்தினி திலங்குஞ்
சீர்த்தியன் தங்கவே லென்னும்
பேர்மலிக் கவிஞன் பெறுநவ ரசங்கள்
பிறங்கிட நற்றமி ழதனில்
பார்மலி சுபத்ரா பரிணய மதனைப்
பாவலா களுநனி வியப்ப
நார்மலி நாடக நடையினிற் சொற்றான்
நானிலத் திதுநவ மாதோ.

---

இந்நூலாசிரியருக்கு
ஆசிரியரும்
செம்மலி கிராமவாசரும்
வடமொழி தென்மொழி வியாகரண
வித்துவானும்
புதுப்பாளையம் சமரஸ சன்மார்க்கசங்கத்தின்
உப அக்ராசனருமாகிய
கவிதிலகம்
**பிரம்மஸ்ரீ. நெ. க. கிருஷ்ணமாசாரியர்**
அவர்களியற்றிய

---

விருத்தம்.

குவலயத்தை யுண்டுமிழ்ந்தோன் கோதிற்றங்கைக்
கோதை சுபத் திரையாளைக் குனிவிற்பாண்டு
தவமைந்தன் தவசியாய் சார்ந்து செய்தத்
தனிமணத்தின் சரிதமதைத் தமிழிற்பண்பார்
நவரசமும் பொலிந்ததென நாவலோர்கள்
நயந்துருகி சிரமசைத்து நன்குபேச
அவமகற்றும் நாடகமாய் அன்பினோடு
அனைவருநல் லார்வமுற வமைத்தானுமால். 1

பலவளமார் நெமலியெனப் பகருமூரில்
பான்மையுடனேவதிவோன் பாவலோரில்
வலவன்கவி மாசிலா மணிதவத்தின்
மாண்பென்ன வென்னவென வசையசான்றோர்
குலமதனில் வந்துதித்தோன் கூறுஞானக்
குறிப்புற்றோர் நேயமது கொண்டோன்மிக்கக்
கலைபலவுங் கவித்துறையுங் கற்றுணர்ந்தோன்
கவின்தங்க வேலனெனுங் கலைவலோனே. 2

---

செய்யாறு தாலுக்கா புதுப்பாளையம்
சமரஸ சன்மார்க்க சங்க
அங்கத்தினரும்
ஷை தாலுக்கா
ஏழாச்சேரிகிராம லேட் முனிசிப்தாரரும்
ஆகிய

**ஸ்ரீமத் சோ. தங்கவேல்முதலியார்**

அவர்களியற்றிய

---

விருத்தம்.

மாவளமார்ந்தசுபத்திரை மணத்தை மண்ணுலகோர்செவிமாந்த
பாவளமார்ந்த செந்தமிழதனிற் சொற்றனன் நாடகநடையில்
காவளமார்ந்த நெம்மலிவதிவோன் கற்றவரனைவருங்கருதும்
நாவளமார்ந்ததங்கவேலெனும் நாவலனுரைத்தனனன்றே.

செய்யாறுதாலுக்கா புதுப்பாளையம், சமரஸ சன்மார்க்கசங்க லைபரெரி
போதகாசிரியரும், காரியதரிசியும், ஷெ யூர் போர்ட்டுஸ்கூல்
உதவி உபாத்தியாயரும், அத்வைதானுபவியுமான தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமான். ப. மாசிலாமணிமுதலியார் அவர்களியற்றிய

---

## விருத்தம்.

சீரிலகு கண்ணபிரான் றங்கையாகிச்
  சிலைவிசயன் றனைக்கூடித்திறத்தின்மிக்கப்
பேரிலகு வயிமன்னு சுதன்றனைகப்
  பெற்றுமதி வமிசம்பின் பெருகச்செய்த
எரிலகு சுபத்திரையாள் மணத்திறத்தை
  யிசையுடனே நவரசமு மிலங்கித்தோன்ற
நாரிலகு நாடகமாய் நானிலத்தில்
  நவின்றிட்டாறென்னி னவிலக்கேண்மோ.

---

### வேறு.

சாலவளஞ் சார்நெமலி சான்றோர்கள் குலதிலகன் சண்முகத்தே
பாலதுறும் பத்திமையன் பாமாசி லாமணிவேள் பயந்தபாலன்
தாலமதிற் பொதியர்பதி சமரஸசன் மார்க்கசங்கஞ் சார்ந்து வாழும்
சீலதங்க வேலனென செப்புமயி தானன்கவி சிங்கவேறே.

---

செய்யாறுதாலுக்கா புதுப்பாளையம் சமரஸ சன்மார்க்கசங்க
உபகாரியதரிசியும் ஷெயூர் போர்ட்டுஸ்கூல் உதவிஉபாத்தியாயரும்
ஷெயூர் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான். ப. மாசிலாமணிமுதலியாரவர்களின்
பிரதமமாணவரும் ஆகிய
ஸ்ரீமான். க. குப்புசாமிமுதலியார் அவர்களியற்றிய

### நேரிசை வெண்பா.

பாரதசு பத்ரா பரிணயத்தை நாடகமாய்ச்
சீரதாய் செய்து சிறப்புற்றான்—நேரதாய்
தாலமதில் நெம்மலிவாழ் சான்றோன் குலத்துதித்த
சீலதங்க வேலனவன் சீர்

---



விநாயகர் துதி.

நேரிசை வெண்பா.

சொல்லாருங் கீர்த்திச் சுபத்திரைகல் யாணமதை
யெல்லாருங் கேட்டிங் கினித்திடவே—நல்லார்க
ளற்புதமா யேத்து மரன்மகனை யோங்கிவளர்
கற்பகவி நாயகர்தாட் காப்பு.

---

கலைமகள் துதி.

நேரிசை வெண்பா.

இன்றி யமையாத வெண்ணு மெழுத்துமாய்
நின்றின் னிலமீது நீக்கமற—வென்றுந்
தலைமகளாய் வந்து சபோசிதரைக் காக்குங்
கலைமகடன் கான்மலரே காப்பு.

## சண்முகக்கடவுள் துதி.

விருத்தம்.

எண்கணனை தலைக்குட்டி யீசனுக்கு குருவாகி
விண்ணவர்சே னபதியாய் விளங்கிதமை பணிபவர்க்கு
கண்மலர்களீராறாற் கடைக்கணித்துக் காத்தளிக்குஞ்
சண்முகன்றன் சரணிணைகட் சந்ததமுந் தலைக்கணிவாம்

---

## சிவபெருமான் துதி.

யாவரு மெவையு மாகி யவரவர் வணங்குமாதி
தேவனுய் தேவர்கட்குந் தெரிவறி யாதுநின்ற
பாவனு தீதனுதும் பரசிவன் பதம் பணிந்தே
காவலன் விஜயன்மேவிக்காதையைக்கழற லுற்றாம்

---

## திருமால் துதி.

ஆரணமனைத்துங்கூறு மாண்டவனுகிநின்றுக்
காரணகார்யமாகக் காத்தளித்திவோனென்ன
வாரண மழைத்தபோது வந்துவந்தனையிந்நூற்கும்
பூரணக் கிருபைவைத்தாட் பூங்கழல் போற்றிமாதோ.

---

## பராசத்தி துதி.

அபனரி யரனுப்நின்ற வவசரமவசவர்க்கும்
பயன்றருஞ் சத்திமூன்றாய்ப்பலகோடிசத்தியாகி
வியனுல களித்துக்காத்து விளங்குமாதேவிகாதை
நயம்பெற வருள்வாயுந்தன் நறுங்கழல் போற்றி போற்றி.

---

## சற்குரு துதி.

பற்கலைப் பதுவலும் பன்னும் வேதமும்
அற்கனும் நானுற வாய்ந்த நான்மறை
நற்குல சேகர நங் கிருட்டின
சற்குரு தாண்மலர் சரணம் நாளுமே.

---

## அவையடக்கம்.

வேதமுடி தனில் விளங்கும் விமலமூர்த்தி
விருப்பமுறும் நண்புடையான் விசயன் செய்த
மாதவியாஞ் சுபத்திரையின் மணத்திறத்தை
மாநிலத்தி னாடகமாய் வலவர்முன்னே
ஆதவன்முன் மின்மினிதா னலங்கற்போலும்
அருஞ்சிகிமுன் வான்கோழி யாடற்போலும்
நீதமுறு மிதைசிறிய னிகழ்த்தலுற்றேன்
நெறிவிள்வீர் மழலையென மனங்கொள்வீரே.

---

## நூற்பயன் வேறு.

அருச்சுனன் சுபத்திரை யருமணத்தினை
திருத்தகு நாடகச் சீரிற் செப்பினால்
மருப்பொசித் தருளிய மாயன்வந்துதன்
கருத்தினி லேற்றுநற் மதியளிக்குமால்.



நூல்

## விநாயகர் துதி.

கரு.

இ-ம். மோகனம். தாளம்-ஆதி.

பல்லவி.

ஓம் விநாயகா சம்போ
  உன்பதமேசதம்
  உகந்தருள்வாய்நிதம்

அநுபல்லவி.

சாம்பசிவ னீன்ற சற்குணஜோதியே
தேம்புவோர் துயர் தீர்த்தருளாதியே (ஓம்)

சரணங்கள்.

(1) கந்தனுக்கு முந்தித் தந்தையைவலம் வந்தோனே-யீசன்
  தந்தமாங்கனியை சொந்தமா யுட்கொண்ட கோனே
எந்தப்பொருளினு மிலகுந் தூயனே
  ஏலவார்குழலிக் கினிய சேயனே
சந்ததமுந் துதிப் போர்க்கரு ணேயனே
சராசரமும் புகழும் நால் வாயனே (ஓம்)

(2) ஆகுவாகனமீ தெழுந்தருள் புரிவோனே—அந்த
அரன் வாழுலகைஔவைக்களித்தபெம்மானே
பாகுசேர் வல்லவை பாக்கிய லோலனே
பாவலர்க்கின்பம் பகரனு கூலனே
மாகுகன்முன்வந்த மங்கள மூலனே
வந்தாட்பணி தங்கவேலனே சீலனே. (ஓம்)

---



## சரஸ்வதி துதி.

தரு.

(வாழியே ஜே ஜே-என்ற வர்ணமெட்டு.)

பல்லவி.

சாரதா நீயே கதி
சந்தத முமுனே
சிந்தனை புரிந்தோம் (சார)

அநுபல்லவி.

நாரதாதிகளும் பணி
நாமகளே அம்மணி
நாவினிற்குடி
நீவரும்படி
தேவிநின்னடி
மேவிவந்தனம் (சார)

தொகையறா.

(1) பாரதி பதுவலாட்டி பாமகளே கல்யாணி
சீரதி சாந்திரன்போற் றிகழ்முக கமலவாணி
ஆரதிஷ்ட் டிப்பவளென்
அன்னையேவந்தருள்முன்
ஆரணிபரி
பூரணிபுகழ்
சீரணிகலை
காரணிமகிழ் (சார)

தொகையறா.

(2) மங்கள வாசவெண்டா மரையமர் வாக்கின் செல்வி
பங்கயத் தவன்முதல்வி பாலனுக் கருள்வாய்க் கல்வி
தங்கவேலன் றன்னகத்தில்
தங்குந்திருவேஜகத்தில்
சரணமடைந்தேன்
தருணமிதுவே
கிரணஸ்வேதா
பரணம் புனைந்த. (சார)

## சண்முகக்கடவுள்

### துதி.

மருவே செறித்த குழலாள் என்னும் திருப்புகழ்சந்தம்

முருகார் மகத்து திருவே ரகத்து
முடிமே லிருக்கு முதலோனே
மூதுமா மறைக்கு பொருளீ சனுக்கு
முறையா யுரைத்த குருநாதா
புருகூ தனுக்கு புகலே கொடுத்து
புரமே லடுத்து கதமேவி
பொருவாளரக்க ரடியோ டிறக்க
பொருதே பொடித்த வடிவேலா
செருகா னகத்தி லொருபா லமைத்த
தினைமா புனத்தில் குறமானை
சிலைவே டருக்கு தெரியா தொளித்து
சிறைதா னெடுத்த பெருமானே

திருகா தலித்து வருமார் பகத்து
திருமால் தனக்கு மருகோனே
ஜெகமேல் துதிக்க மயில்வா கனத்தில்
சிறியேன் களிக்க வருவாயே.

---

## சபாரஞ்சிதன்

வருகிற தரு

அள்ளியள்ளி நீர்க்குடிக்கும் என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

வந்தேன் வந்தேன் வந்தனம் தந்தேன் தந்தேன் சபை
வந்தமர்ந்தவர் பாதமே—பிரசாதமே
வந்தமர்ந்தவர் பாதமே.
வலவ ரெனவே
நிலவு மகில
புலவர் களையும்
பலவாய் வணங்கி (வந்)

(2) செந்தாமரைக்கண்ணனை சேவித்தவன்றங்கையை
சிந்தித்து தீர்த்தமாடியே—சீர்நாடியே
சிந்தித்து தீர்த்தமாடியே
ஜெகமெங்கும்புகழ்
மகமதிமகன்
சுகமணங்கொளப்
புகுங்கதைசொல் (வந்)

(3) எங்களிசைநாடகச்சொல் இகழ்ப்புன்சொல்லாயினும்
ஏற்றருள் புரிவீர்களே—யெழில்லோர்களே
யேற்றருள் புரிவீர்களே
இலங்க குறைகள்
விலங்க முறைகள்
துலங்க சிறுவன்
நலங்களடைய (வந்)

(4) தங்கவேலன் பணியும் சற்குரு தாட்களே
சரணம் சரணம் நாங்களே—சபையோர்களே
சரணம் சரணம் நாங்களே
ஐயமடையவி
ஜயமருளுவீர்
நயமுடன்மிகு
தயவுபுரிவீர். (வந்)

## சுயோதனன் தர்பார்.

பொதுவிருத்தம்.

அலைகடலுலக மெல்லா மருமையாய்ப் புகழைப் பெற்ற
தலைமையா மத்தி னப்பேர் தனிநகர் தனைபுரக்கும்
மலைநிகர் மணிபுயத்தான் மாசுணத்துவச னான
கலைமதி குலத்து தித்தக் காவலன் வருகின்றானே

சுயோதனன் வருகிறதரு.

இ-ப்-மோகனம்-தாளம்-ஆதி

பல்லவி.

துரை துரியோதனன் வந்தான்—மிகு
துஷ்டகனிஷ்டருட
னஷ்ட திக்கும்வணங்க (துரை)

அநுபல்லவி.

விரைசெறி வலம்புரி விளங்குமாலை பிணங்க
வேந்தர்களெல்லாம் வந்துவிழ்ந்து தன்னடிவணங்க
திரைபொருள் கொடாதவர் திகைத்து தாழ்ந்து வணங்க
தீரத்தன்மையைக் காட்டி திங்கள்குலம் விளங்க

தெழித்துப் பாண்டவரைப்
பழித்துப் பெரியோரைக்
கழித்து மநு முறை
யொழித்து சகுனியை
யழைத்து வஞ்சகமே
யிழைத்து மதிமுகந்
தழைத்து சிம்மாசனம்
செழித்துக் கொலுமுகம் (துரை)

வசனம்.

மந்திரி நமக்குப் பங்காளிகளும் பகையாளிகளுமாகியபாண்டவர்கள் பூண்டைப் பற்றறுக்க நாம் பலதடவை முயன்றும்பயன் படாமற் போயிற்று, இனி எப்படியாவது அவர்களை ஈடழிக்க வேண்டும், அவைபொருபுறமிருக்க, இப்போது என்மனதில் ஓர் நினைவு உதித்திருக்கிறது, அதையுடனே முடிக்கவேண்டும் ஆதலால், நம்மை இரக்ஷிக்க வந்தநல்லம்மானாகிய சகுனிமாமாவை சேவகனைவிட்டு சிக்கிரம் அழைத்து வரச்செய்வாய்.

மந்திரி வசனம்.

சித்தம் அரசே

மந்திரி வசனம்.

சேவக:—நீ சீக்கிரம் சென்று காந்தார தேசத்ததிபனுன சகுனிமஹாராஜனை சபைக்கு அழைத்துக் கொண்டு வருவாய்

சேவகன் வசனம்.

சித்தம் பிரபு

## ச குனி வ ரு வ து.

இங்கிலீஷ் நோட்.

கண்ணிகள்.

(1) வந்தே னெந்தன் மருமகனே
மனமது மகிழ்ந்திட மதிமுகனே
வண்மையாய் மிகு தண்மையாய்
மகிபர்கள் வணங்கிடப் பண்மையாய் (வந்)

(2) சந்தேக சம்பவ மேக
சகலமும் நின்வசந்தானக
சார்ந்திட அது சேர்ந்திட
சந்தோஷம்நீ கூர்ந்திட (வந்)

(3) பாண்டவர்க்குரிய பாகமதை
பக்குவமாய்க்கைக் கொள்வதை
பகர்ந்திட அதை தகர்ந்திட
பாரெலாம்நீயே புரந்திட (வந்)

விருத்தம்.

என்மனம் போல்நடக்கும் என்மருமகனே கேளாய்
தன்னெறியோ டழைத்த சங்கதியாதோ இன்று
உன்னதமான தென்ன உரைத்திடவேண்டு மிப்போ
மன்னர்கள்போற்று மெந்தன் மகிபனே விபரம்யாதோ.

வசனம்.

என்மனபோல் நடக்கும் மருமகனே மன்னரெலாம் வந்து வணங்கி நிற்கும் மாசபையில் என்னையழைத்தக்காரணம் யாது கூறுவாய்.

## துரியோதன மஹாராஜன் வருகிறது.

தரு.

(இ-ம். தேசிகதோடி. தாளம்-ஆதி)

கண்ணிகள்.

(1) மந்திரத்தந்திர மிகுமிந் திரஜால
மாமா யென்னருகே வருவீரே
மாக்ஷிமையுடனா
சாக்ஷியெனக்குனது
சூக்ஷியினாற்பெறத் தருவீரே (மந்)

(2) சந்திரக்குலத்தினில் வந்த சுந்தரனென்
சம்மதப்படிநீர் முடிப்பீரா
சாற்றுகிறேனுமைப்
போற்றுகிறேனடி
யேற்றிடவே வழி கொடுப்பீரா (மந்)

(3) சங்க வண்ணனுடைய தங்கை சுபத்திரையாந்
தையல் மீது மைய லானேனே
சங்கையிலாமலவ
ளென்கைவசப்படவே
மங்களமாதெவ் விதந்தானே (மந்)

(4) பங்கப் படாமல்பல பத்திரா மாத்திரம்
பரிந்துரைப் பாரெனக்கே கொடுக்க
பட்டிமகன் றினமுங்
குட்டிக்கலகஞ்செய்கி
ருட்டிணனிருக்கி றனதைக் கெடுக்க (மந்)

விருத்தம்.

மகிழுடனே வந்தசகுனி
மாமனே களிகொண்டேன்
அகிலந்தன்னி லுன்னைப்போல
யாருமில்லை மாமனே
திகிலுறாமல் கேளும் கேளும்
திவ்யரூப னேயனே
பகிரண்டங்கள் புகழுமாமா
பரிந்துரைப்பேன் கேளுமே.

OFFICE OF THE REGISTRAR OF
30 APR 1927
MADRAS

வசனம்.

மதிகுலமாபுக்கு எழிபடு தெய்வம் போல் வந்துதித்த மாமாவே பலராமனுடைய தங்கை சுபத்திரை யென்னும் நங்கை மணப் பருவம் வாய்ந்திருக்கின்றாளாம். ஆதலால் அன்னவளை மாலையிட்டு மணங்கொள்ள மையல்மீறி, மாரன் கணையால் வருந்துகின்றேன். ஆயினும் நமக்கு எதிரியாயிருக்கும் இடைப் பயலான திருட்டுக் கிருஷ்ணன் இடையில் என்ன கலகம் செய்வானோ எனக்கு ஒன்றும் தேரியவில்லை இதர்க்கு தக்கபடி யோசித்து எப்படியாவதுஎனக்கே மணம் புரிவிக்க உம்மையே வேண்டிவாவழைத்தேன்மாமா.

தரு.

(இ-ம். இந்துஸ்த்தான் காபி தாளம். ஆதி.)

கண்ணிகள்.

(1) எனது மனதுக் கிசைந்தப் பெருமைப் பெறு மருமகனே
எனக்குமிந்த மனக்கருத்துன் டிதர்க்கு முன்னமே

(2) உனது மனதின் படி முடிந்திட வுண்டு யோசனை
உரைப்பே னிங்கு வரும்படிசெய் விதுர ராசனை

(3) சத்திய குணசம் பன்ன தரும மன்னவ ரவர் போய்
சாற்றிடல் மணந் தானிசைந்திடுந் தாமே சுலபமாய்

(4) உத்தம பலராமனுமன மொருமித்து விடுவான்
உலகினிற் பெருங் கலகஞ்செய்பவனு முடன்படுவான்

விருத்தம்.

உனது சிறிய தகப்பனாரை
உடனே நீ வரவிட்டு
கனிவுகூறி களிப்பதாக்கி
கருத்தை நீ வெளியிட்டு
பனிபோல் மணமும் பேசிவிடவே
பலராமன் பாலனுப்பிடு
இனிவாயாவும் கைகூடியே
இசையும் பக்குவமாகவே.

வசனம்.

மருமகனே, நின் சிறிய தகப்பனாகிய விதுராராஜனை விரைவா யழைத்து பலராமனிடம் மணம் பேச விடும் பக்ஷத்தில் விவாகம் முடியும் பக்குவமாய் சொல்லி பண்போட்டனுப்புவாய்.

## விகர்னன் வருகிறது.

(இ-ம். இந்துஸ்த்தான் தோடி தாளம்-ஆதி.)

கண்ணிகள்.

(1) அண்ணா யிவ்வெண்ணங் கொள்ளாதீர்
அநுசனென்சொல்லை தள்ளாதீர்
பெண்ணாஞ் சுபத்திரையினால்
பெருமைக் குறைவாயாகையினால் (அண்)

(2) கண்ண னன்னவள் முன்னவன்
கலகஞ் செய்யவே முன்னுவன்
திண்ணமே சங்கையில்லை
தெளிவீரீதென்ன தொல்லை (அண்)

(3) பாவைருக் மணியாளுதை
பட்டசிசுபாலன் கதை
மேவவில்லையோ வுந்தன்
மிளிர்செவிகளுக் கெந்தன் (அண்)

(4) மாமன் வார்த்தை கேட்காதீர்
மதியை வீணில் வீழ்க்காதீர்
காமன் வலைக்கு ளாகாதீர்
கருத்தழிந்துப்போகாதீர் (அண்)

விருத்தம்.

நிலையிலா வீண்யோசனை நீங்களும்கொள்வதாக
கலகமேவிளைக்குமண்ணு கனிவுடன்கூறிவிட்டேன்
பலராமறுட்பட்டாலும் பரந்தாமன்கொடுத்தேதீர்பான்
நலமுடன்சொன்னேனுண்மை நாடாதீர்மாமன்சொல்லே.

வசனம்.

அண்ணு, ஏன் வீண் யோசனை செய்கின்றீர் வேண்டாம் இந்த எண்ணத்தை விட்விடும், ஒருக்கால் பலராமன் இந்த யோசனைக் குடன் பட்டாலும் பாண்டவர் பால் பக்ஷம் பாராட்டும் பரந்தாமன் எவ்விதத்திலும் கூடிவரவொட்டான். ஆகையால் மதிகெட்ட மாமன் வார்த்தையை கேட்கவேண்டாம்.

சகுனி விருத்தம்.

நினைத்ததோர் காரியத்தை நிர்மூலமாக்கும்பாவி
தனையினிவெளியிற்றள்ளி தட்டியேவெட்டிடுங்கள்
புனிதமாய்ப்போகும்போது பூனையும்குறுக்கிட்டாற்போல்
சனியன்போல்சொல்லலானுன் தைரியம்என்னகண்டாய்

வசனம்.

நல்லவிஷயத்திற் காகப்போகும் போதே பூனை குறுக்கிட்டது போலும் அழையாவீட்டில் நுழையும் சம்பந்திபோலும் எதிரில் ருென்றி கண்டபடி பேசுகின்ருனே இவனையார் கேட்டது அவன் பேச்சைக்கேட்கவேண்டாம்! இனி இடங்கொடாதே ஆகையால் இவனை இப்போதே;

சகுனி தரு,
(இ-ம். காம்போதி தா-ம். ஆதி.

பல்லவி.

பிடித் துத்தள் ளுங்கள் வெளியே—சும்மா
பினற்று கின் ருன் துணிந்து
கனத்தசபைமுன் வந்து

அநுபல்லவி.

அடுத்து சுபந்தனை
கடத்தும் வகைதனை
யெடுத்துப் பேசிடுமுனை
தடுத்து சொல்லுமிவனை (பிடி)

சரணம்.

பன்னக துவசநம்
மன்னர் மன்னனதிவிற்
பன்னன் றுரியோதனன்
அன்ன நடையும்நல்ல
மின்ன லிடையுமிரு
தென்னங் குரும்பைபநிக
ரென்ன பெருத்ததனங்
கன்ன லன்னமொழியள்
கன்ன மார்ந்தவிழியள்
உன்ன தமாய்விளங்கும்
பொன்ன ளுள்பலராமன்
பின்ன வளைமணந்து
தன்ன கம்போல்புணர்ந்து
நன்ன லந்தாங்கொள்ள
சொன்ன சொல்லுக்கிணங்கி
நன்ன யமாயிருக்கும்
மன்ன வராம்நமக்கு
முன்னம் பிறந்தவன்போல்
சன்ன தமாகவேவி
கன்னன் விளம்புவதேன்
சின்ன பயலிதர்க்குள்
என்ன நெறித்தெரியும்
இன்னம் சிலநாள்போனால்
என்னையு மென்மருகன்
தன்னையுமிவன்மதிக் கவேமாட்டான்
இதர்க்காகவிவனை யெவன்கேட்டான்
இனியிந்தசனியனிங் கிருக்கக்கூடாது
எந்தக்காரியமு மீடேறாது
என்னைக்காட்டிலு மிக்குத்தெரிந்தவரேது
எழுதடற் சூழலகினிற்றவாரது. (பிடி)

சகுனி விருத்தம்.

இந்தநற்சபையின் முன்னே
　　எல்லோரு முன்பதாக
உடந்ததுமன்றி என்னை
　　மதியாமல் யோசியாமல்
கந்திகத்திரிக்காயில்
　　கையுங்கால் முளைத்தாற்போல
சிந்தையிற்றேன்றுமாறு
　　சொல்வதேன் லெடறிவிடுப்பீர்

வசனம்.

அ ஆ என்ன அகங்காரம் அரிய பெரிய அறிவாளர்களாகிய அரசர்கள் வந்து சூழ்ந்திருக்கும் இந்த சபையில் என்னை இது வரையில் எதிர்த்து அவமதித்துப் பேசினவ ரெவருமில்லை. இப் போதுதான் கத்திரிக்காயில் கையுங்காலும் முளைத்ததுபோல் விகர் னன் வந்து மீறிப் பேச ஆரம்பித்தான், ஆகையால் இவனை இங்கு இருக்கவொட்டாமல் பிடித்து வெளியே தள்ளுங்கள்,

விகர்னன் தரு.

(நீதிசொல் பெரியோரிவ் விதிதனிலாருமிலையா—எ-வ-மெ)

கண்ணிகள்.

கொல்லையிற் பல்லிபூண்டுக்
　குடிக்கொண்டு முளைத்ததுப் போலே
　　　　புவி மேலே—எங்கள்

குலத்தைக் கெடுக்க வந்தக்
　குரங்கு சகுனியேவுன் னாலே
　　　　செங் கோலே—இனி

யல்லற்படப் போகின்ற
　தையமில்லை யெனக்குத் தெரியும்
　　　　எல்லாக் குறியும்—அந்த

ஐவர்க்கு மெங்க ளுக்கு
　மாகாதப் பகையுண் டாக்கி
　　　　பழி தேக்கி—கமல

கண்ணனும் நீபு மிந்தக்
காவலர் குலத்தைக்கரு வறுக்க
வந்தீர் குறுக்க—இருக்க்
என்னை சபையை விட்டு
யேகென்றுநீசொல்வதென்ன ஞாயம்
அனி யாயம் (கொ)

விகர்னன் விருத்தம்.

சனியனைப் போலுதித்த
சகுனியே மாமாகேள்மோ
எனையிவன் பிடித்துத்தள்ள
என்னவா மிவன்தன்னாலே
உனக்கிந்தசபையிற்றோன்றி
உரைப்பது நலமேயல்ல
மனஸ்தாபம்வாராமுன் நீரும்
வந்தவழி பார்த்துசெல்வீர்.

வசனம்.

எங்கள் சந்திரகுல சந்ததிக்கு சனியனைப்போல் வந்து சேர்ந்த சகுனிமாமா என் தமைபனோடு யான் வார்த்தையாடிக்கொண்டிருந்தால் என்னைப் பிடித்து வெளியே தள்ளுங்களென்று நீர் பெருமிதங்கொண்டுப் பேசுவதற்கு உமக்கு இந்தசபையில் என்னவதிகாரம் மனஸ்தாபம் நேரும் வந்த வழியைப் பாரும்.

சகுனிவிருத்தம்.

மருகனேயிவன் சற்றேனும்
மாறுபாடின்றி சொன்ன
கருவமாம்வார்த்தை கேட்டும்
கவனியா திருக்கலாமோ
தருவைப்போல் நீயிருத்தல்
தர்மமே ஞாயமாமோ
இருப்பது சரியேயல்ல
இதோநானும் சென்றுவாரேன்

சகுனி வசனம்.

மருமகனே, நின் மனதுக்கு மாறுபாடின்றி சொன்ன என்னை மரியாதைத் தாழ்வாக வதரிக்கொட்டின விகர்னன் வழுவான வசனத்தைக் கேட்டு நீ மரம்போலிருப்பது என்ன ஆச்சர்யம் எனைக்க கிதுவரையி போதும் மரியாதை யான செல்லுறேகின்ன்.

## சகுனிக்கும், துரியனுக்கும் சம்வாதம்.

இங்கிலிஷ் நோட்.

துரியன்.

மாமாநீர்கோ பங்கொள்ளாதிர்
மருமகனென்வார்த்தையைத்தள்ளாதீர்
ஆமாமுமையிப் படிசொல்ல
அரசர்கள்யார்க்குமழகள்ள (மாமா)

சகுனி

அரசர்க்கரசன் நீயிருக்க
ஆருமாவிகாணன் மறுத்துரைக்க
சரிசரியினியா னிங்கிருக்க
தகுதியலவேயிதில் மனம்பொருக்க (அர)

துரியன்.

மனம்பொருத்திருப் பீர்மாமாநீர்
மடையனிவனேவுமக்குநேர்
கனம்பெறமுலகினி னமகனையார்
கடையேன்கடைத் தேறக்கண்பார் (மனம்)

சகுனி.

மருமகளேநீ கடைத்தேற
வந்தேனேயான்களிகூற
திருமணமுடிக்கிடும்படிநீயே
தீரவிதுரனையழைப்பாயே (மரு)

துரியன்.

அழைத்திடுவேன்யா ரும்பார்க்க
அநுப்புவேனெனக்கேபெண் கேட்க
தழைத்திடுஞ்சபைதனக் குரியவனு
தடுத்திடவிகர்னன்வெரியவனு (அழை)

துரியன்.

ஆமாம்விகர்னன் மாகெருவி
யப்புறம்போகச்சொல்லொருவி
யேமாருதே மதியோதும்
என்னையேநம்பு எப்போதும் (ஆமாம்)

சகுனி விருத்தம்.

இவனைநல் சுழலில்வைத்தே
இருந்திட்டால் தீமை தீமை
பவமதுநேரும் சொன்னேன்
பரப்புடன் துரத்திவிட்டு
கவலையில்லாமல் நாமும்
கனிவுடன்யோசித்திட்டால்
அவலமற்றிருப் போமுன் சிற்
றப்பனைவரவழைப்பாய்.

வசனம்.

மருமகனே. இந்த துன்மார்க்கப்பயலை நம் சூழலில் வைத்திருந்தால் பூனைக்குட்டியை மடியில்கட்டிக்கொண்டு சகுனம்பார்ப்பதுபோலாகும். ஆதலால் இவனை முன்னிட்டுத் துரத்திவிட்டு இக்கணமே விதுரனை விரைவி லழைத்து மணம் பேசவிடுவாய்,

என்னடா விகர்னு நீ
ஏடாகோடங்கள் நீயும்
பன்னுதலுனக் கேனிந்தப்
பான்மையும் ஏனோ போ போ
சின்னவனுந்தன்வார்த்தை
செல்லாது சபையை விட்டு
பின்னப்படாமலே போ
பினத்தாதே நீ விகர்னு,

வசனம்.

அடெ விகர்ணு! நீ என்ன ரொம்பவும் தலை கிறுகப்பேசுகின்றனை இந்த சபையில் உன்னையார் வழைத்தது உனக்கிங்கு என்ன வார்த்தையிருக்கிறது உன்சொல்லைக் கேட்பாரியாருமில்லை வீணில் உளராதே! இனிமேல் இந்த சபையை விட்டு நட நட சட் டோ.

## துரியன் விகர்ணனைக் கோபிக்குந் தரு.

(இ-ம். அடாணு தாளம்-ஆதி.)

பல்லவி.

அடடா! அடடா! அட என்னடா மடையா அட
அடன்மிகு மாமனை விடவிடப் பேசினை
யாகட்டுமேன் கெர்வமா

அநுபல்லவி.

நடடாசபையைவிட்டு நலமுடனெனக்குநீ
நவின்றது போதும் புத்தி நன்று யிருக்கின்றது (அட)

சரணம்.

அதிகப்பிரசங்கியுனை யாரிவணழைத்தது
அச்சபயமிலரம லண்ணனென்றும்பாராமல்
சதிருடனரசர்கள் சார்ந்தசபையில்வந்து
சட்டம்பேசுவதென்ன தைரியமாயிசைந்து
எதிரிட்டுயெனைவிண்டு இறுமாப்புமிகக்கொண்டு
எல்லாந்தெரிந்தவன்போ லிடம்புவகைக்கண்டு
எதிர்க்காலவினைகளை யெடுத்துரைப்பதாக்குநீ
யீசனேஎங்களுக்கு மீசாமாகப்பேச

ஏற்குமா யித்தனைதான்
மார்க்கமா யெண்ணியடுதன்ன
மூர்க்கமா விரக்கமின்றி
தீர்க்கமா யினி
எட்டி யுதைப்பேனுனை
மட்டிப் பயலேயெனை
நெட்டிப் பேசவந்தனை
இட்டி மாதுலன்றனை

கட்டி பவமதித்துத்
திட்டி சினமுறவே
குட்டி நாய்போற்குலைத்து
செருக்குக்கொண்டிருக்கிறாய்
சருககுக்காட்டாததினால்
குருக்குலத்தினிலனை
வருக்குமிலையவனீ (அட)

வசனம்.

அட துஷ்ட! அம்மானை யிகழ்ந்து அம்மானைக்கொன்ற யாதவப் பயலைப் புகழ்ந்து, எனககு புத்தி புகட்டியது போதும் அப்புறம் செல்.

விகர்னன் விருத்தம்.

கேடுதான் வருதும் பின்னே கெட்டிடும் மதிதான்முன்னே
பாடுநிரதிந்திருந்தும் பகர்வதேனிதனையண்ணா
காடுதான் கொடுக்கப்பார்க்கும் நயவஞ்சன் சகுனிவார்த்தை
எடுதானுமோகானும் இடமீதலிகழுண்டாமே.

விகர்னன் வசனம்.

கேடுவரும் பின்னே, மதிகெட்டுவரும் முன்னே, மென்னும பழமொழிப் பழுதுறாது, இனி நா னென்ன சொல்வது தங்கள் சித்தம்,

துரியன் விருத்தம்.

சேவகாநீயுப்சென்று சீக்கிரமாக எனது
பூவவர் சிறிபதந்தையை பொட்டெனவிங்கழைத்து
தீவிரமாகவாராய் திரளுடன்சேயல்கேகி
எவலாலுாலமின்றி ஏகியேவாராய் வாராய்.

துரியன வசனம.

சேவக, நீ விரைவாகச்சென்று விதுராஜனை இங்ஙனம் அழைத்துக்கொண்டு வருவாய்.

சேவகன் வசனம்

சித்தம் அரசே.

தரு.

அம்பா மதுரை மீனாஷி

விசைவாகநீயுமே சென்று தந்தை
விதுராஜனை யின்று அழைத்து
வருவாயாகிலது நன்று
மாசபை யகன்று (வி)

ஒன்றும்சொல்லாமல் நீயே இதை
ஓதியேவரு வாயே ஜல்தி
நின்றிடாதே சேயே
நிமையிற்றருவாயே (வி)

இந்தவிஷயம் சொல் லாதே நீயும்
இங்கனம் நில் லாதே ஜல்தி
வந்திடு போல் லாதே
மாய்கையும் லெல் லாதே (வி)

## விதுரன் வருகிற தரு.

பொறுங்கள் பொறுங்களென் சொல் பொய்யாது

(என்ற வர்ணமெட்டு)

கண்ணிகள்.

(1) அரசர்க்கரசனான துரி யோதன
அரவக் கேதன
அப்பாயெனை யிப்போதுநி அழைத்தக் காரணமென்ன (அர)

(2) முரசக்கொடி படைத்
முன்னவனே வஞ்சித்திட
முன்னினையோ உன்னினையோ என்னவோ சொல்வாயப்பா (அ)

(3) சகுனிகன்ன னுக்கு
தக்கதுணையா யிருக்க
சற்குமுனர் வந்த என்னால் பெற்றிடும்வாகை பெறுமோ (அர)

### விதுரன் விருத்தம்.

அன்புசேர் மகனேயிங்கு அதிவேகமாகயின்று
என்னைநீவரவழைத்த தேனோசொல்மகிழ்வுமீற
துன்பமும்யாதோயின்று சொல்லுவாய்சீக்கிரமாக
மன்னவாவிபரமென்ன வழுத்துவாய்விஷயந்தானே

### வசனம்.

சுயோதனா, என்னை என்ன விசேஷத்தைப்பற்றி இவ்விடம் வரவழைத்தது இயம்புவாய் மைந்த.

## து ரி யோ த ன ன் த ரு.

(இ-ம். கல்யாணி தா-ம். ஆதி.)

### பல்லவி.

அழைத்த சேதியைக் கேளும்—சற்றும்
அகப் பற்ற சிறிய
தகப்பனாரே உம்மை (அழை)

### அநுபல்லவி.

இழைத்த மணிமுடி
செழித்த அரசர்கள்
வழுத்த மதிகுலம்
தழைத்த சபைதனில்

### சரணம்

சாபாலருடனடல்
பூபாலரும்வணங்கும்
மாபாரதகலக
கோபாலகிருஷ்ணனுக்கு

தங்கையாள்—மலர்
மங்கையாள்—நிகர்
கங்கையாள்—இளங்
கொங்கையாள்—அந்த

மாதுசுபத்திரையின்
மீதுமோகங்கொண்டேனிப்

போதுசகிருடன்தப்
பாதுயானன்னவளை

சாரவே—கட்டிச்
சேரவே—மனந்
தேறவே—மகிழ்
கூரவே—நீர்

சென்று துவாரகாபுரிக்
கின்று நமதுகடன்
என்று செல்வதேமிக
நன்று நன்று கமல

கண்ணனையும் அன்னவன்றன்
அண்ணன் பல ராமனையுங்
கண்டானந்தத்துடனே
தண்டார் மகிருடபன்

விண்டானத் தோருமெனைக்
கொண்டாடும்படிப்புகழ்
உண்டாகும் படியவர்
ஒருமிக்க—மணம்

திருமிக்க—அனை
வருமிக்க—வரும்
படித்தக்க—நல்ல
உத்தமரே—உமது

சித்தங்களித் தித்தினம்
ஒப்புதாம்பூலம்பெற்று
அப்புறம்புறப்பட்டு வருவீரே
உண்மையானவுரை தருவீரே

உரைசெயும் பலவகை
பரிசுகளும் வழங்க
சாசமுடனே மண
முரசங்களுமுழங்க

வரிசை வரிசையாக அரசர்க ளுடன்வர
வரிசிலை வல்லவரே நர்சறப் புறப்பட (ஆ—று)

துரியன் விருத்தம்.

என்னிட சிறியதந்தாய் இயம்புவதொன்று கேள்மே
முன்னவன்பலராமர்க்கும் மூர்த்திபாம்கிருஷ்ணனுக்கும்
பின்னவளானசுபத்ரை பெண்மீதுகாதலானேன்
அன்னவள்தன்னை எனக்கு அருமணம்செய்விப்பீரே.

வசனம்.

இளைய பிதாவே, பலராமச் சக்கரவர்த்திக்கும், பால்; தயிர் பசும் வெண்ணெய்க் கள்வனுக்கும், பின்னவளான சுபத்திரை யென்னுந் தோகை மணப்பருவம் வாய்ந்திருப்பதாகக் கேள்வியுற் றேன், ஆனதால் அன்னவளை மாலையிட்டு மருவி வாழ மணங்கொ ண்டேன். தாங்கள் இத்தினமே பலராமன்பால் சென்று பாந்தாம னையுங் கண்டு மணம்பேசி ஒப்புதாம்பூலம் பெற்றுக்கொண்டு உட னே வரவேண்டுகின்றேன் பிதாவே,

துரியன் விருத்தம்.

மைந்தனே உன்விருப்பம் வண்ணமேதுவாரைக்கு
சுந்தர தம்மைக்கண்டு சுருக்கினில் மணமுடித்து
சந்தோஷமாகவாரேன் சஞ்சலமுனக்குவேண்டாம்
பிந்திடாயாதும்பாரேன் பிகுவுடனீயிருப்பாய்.

விதுரன் தரு.

(மீனமர்பொய்கை நாண்மலர்க்கொய்தான் என்வமெ)

கண்ணிகள்.

(1) போய்வருகின்றே புகழுடனேநான்
புண்ணியதுவாரகா புரிதனக்கேதான்
ஆய்மநூநீதி அமைச்சர்களகதி
அங்கமோடுலகை யாளும்விரைக்கியாகி (போய்)

(2) சுபத்திரைதனக்கும் சுயோதனுவுனக்கும்
சுபமதுசேர்வற சுகமுறநடக்கும்
விபவவைபோக விமரிசையாக
வேந்தரெலாம்வந்து விளங்கமுன்பாக (போய்)

(3) அடல்பலராமன் அச்சுதநாமன்
அவரிருவருமக மகிழ்ந்திடவேமுன்
திடமுடன்சென்று திருத்தமாயின்று
சேவையைப்பார்க்க சீராய்பெண்கேட்க (போய்)

வசன

மைந்த, நின் விருப்பத்தின் வண்ணமே துவாரகைக்குச் சென்று கோகுல திலகர்களைக்கண்டு சம்பாஷித்து அந்தத் தையலை உனக்கே தரும்ப டிசம்மதிக்கச்செய்து ஒப்புத்தாம்பூலம் பெற்றுவருகின்றேன் விடைதருவாய்.

தூரியன் தரு.
(சென்று கனிபறித்து.)

சென்று சீக்கிரமாகவாரும் இந்த
சேயிழைதன்னை நிரும்
நன்றுடன் மணமும் செய்யப் யாரும்
நலமாமுடித்திடவே கோரும்
ஞாயமுடன் தாரும்
மாயனுடன் சேரும்
மங்கையைமணடித்து வாரும்
அவர்கலைப்பக்குவ மாக்கி ரிர்
அப்போதேசெய்வீர்மனம் நோக்கி
கவலையும் தீரவ ளாக்கி
கடுகினில் எனதுயாம் நிக்கி
கனிவாய் முடிப் பீரே
இனிவாய் நடிப்போரே
எகுவீர்சிக்கிரமாக நிரே

தூரியன் வசனம்
சென்று வருவீர் தந்தையே.

## பலராமன் வருகிற பொது விருத்தம்

நச்சரவணையார்க்கன்று நண்ணியசாபம்பத்தில்
மெச்சுமேழ் பவந்தான்போக மிச்சமாய் நின்றமூன்றில்
முச்செகத் தோரும்பேச முதன்மையாய் வந்ததீரன்
பச்சையந் தாணைக்கொண்ட பலராமன் வருகின்றானே.

வருகிற பொது தரு.

(சுந்த வீமராஜன் வந்தனன் என்ற வர்ண மெட்டு)

பல்லவி

சுந்தர பலராமர் வந்தனர்
துஷ்டநிக்ரகமிகுந்த
கிருஷ்ணனுக்குமுன் பிறந்த

அநுபல்லவி

மந்திரிமார்கள் மறைவலோர்கள்
வந்து சுந்து
வாழ்ந்திடவீடி சூழ்ந்திடநாடி (சுந்)

சரணங்கள்

(1) கலப்பைப் படையான் கவிழ்ந்தக் குடையான்
கண்ணன் எண்ணம்
கைக்கொண்டிடவே கருதலர்படவே (சுந்)

(2) நிலமகட்சுமை நிருபர்கள் தமை
நீக்குந் தாக்கும்
நிண்ணயதீரன் நிலைபெறும்வீரன் (சுந்)

பலதேவன் தேச விசாரணை.

இ-ம். கானடா. தாளம் - ஆதி.

பலதேவன்

மாநிலமீதினில் வாதமும்மாரிதான்
மாசறப் பொழிகின்றதா

மந்திரி

மாபலதேவநின் மறுதரும நிதியால்
மாறுமற் பொழிகின்றதே

பலதேவன்

தேவாலயபூஜைகள் தின்மறுகாலமும்
சீருட னடக்கின்றதா

மந்திரி

திருப்பணிபூஜைகள் திருவிழாநாளுடன்
சிறப்பாக நடக்கின்றதே

பலதேவன்

3 வேதியநீதியாய் வேதாகமங்களை
யோதிவருகின்றார்களா

மந்திரி

மேதினிமீதினில் வேதியர்மாமறை
யோதிவருகின்றார்களே

பலதேவன்

4 எல்லைக்கொல்லை முல்லையெல்லாம்செழிந்துமே
இனிமையைத தருகின்றதா

மந்திரி

எஞ்சுதலில்லாமலே விஞ்சிப்பல்வளங்களும்
எங்கிருக்கின்றதாசே

பலதேவன்

பசுவும்புலியுமொரு படியினில்நிருண்டு
பாரினிலுலாவுதா

மந்திரி

பாங்குடன் தங்களாணைப் படியிந்தப்படிதனில்
பகையின்றி நிருண்ணுதே

பலராமன் விருத்தம்.

மந்திரி எங்கள்தங்கை மங்கையாம் சுபத்திரைக்கு
சுந்தரப்பருவம் வாய்ந்து சுகமுடனிருக்க இப்போ
யெந்தமன்னவர்தானிங்கு ஏற்படுவாரோகாணேன்
உந்தனின்மனந்தானென்ன உரையதுசெய்குவாயே,

பலதேவன் வசனம்.

மந்திரி, எங்கள் தங்கை சுபத்திரை யென்னும் மாது சிரோன்மணி மணப் பருவம் வாய்ந்திருக்கிறாள். ஆதலால், அன்னவளுக்குத் தகுந்த மணவன் எவன் ஏற்படுவானோ தெரியவில்லை, என் செய்யலால்.

மந்திரி விருத்தம்.

திருமணநாள்க்குறித்து தேசாதிமன்னர்கக்கு
திருமுகம்வரைந்தனுப்பி தீரரின்செய்திகண்டு
திருவளர்சுபத்திரைக்கு திவ்யமன்னவரைத்தேர்ந்து
திருமணம்செய்துவைப்பீர் தீரரேயிதுதான்நன்றே.

மந்திரி வசனம்.

அரசே, சுபத்திரைக்கு சுப முகூர்த்த நாளேற்படுத்தி திருமணத் திருமுகம், வரைந்து தேசமெங்கும் செலுத்தி மன்னவர்களையெல்லாம் வரவழைத்து நம் குலமகள் கோரியக் கோமகனுக்கு கொடுத்தருள்வீர் புரபி.

## விதுரனுக்கும்பலராமனுக்கும்சம்வாதம்

விதுரன் சொல்வது.

பார்ஸ் மெட்டு.

1 காமபாலனென்னும் பலராமநாமா வந்தனம்
கழலடிதனக்கே

பலராமன்

வாமமார்விதுரமஹாராஜனே
வாரும் உட்காரும

விதுரன்

2 தங்களிடந்தான் வந்தேனோர் மங்களத்தைக்குத்து
தயைசெய்யவேண்டும்

பலராமன்

மங்களகாரியமான சங்கதிகளென்னமோ
மயங்காதுரைப்பீர்

விதுரன்

3 வணங்காமுடி மன்னனுக்குன் றங்கைசுபத்திரையை
வழங்கிடவேண்டும்

பலராமன்

இணங்குமிம்மணங்கொண் டிங்கனெய்தியதிவ்வாறெனில்
இசைத்திடுகின் றேன்.

வசளம்.

சத்துவகுண சம்பன்ன, சங்யாகுல மன்னனான சர்ப்பக்கேத னனுக்கென்று தாங்கள் தகுந்த முறையோடு எங்கள் தங்கையைக் கேழ்க்க வந்தது எனது மனதுக்கேற்ற சம்மதமென்றாலும்.—

## பலராமன் தரு.

(காணுமல் வீணிலே காலக் கழிக்கலானேன் எ-வமெ)

கண்ணிகள்.

1. ஆனலெனதுதம்பி யனுமதியெப்படியோ
அழைத்தவனைவிள்ளுவேன்
அதன்பின்புதான்சொல்லுவேன் (ஆனல்)

2 வானளிந்திரனந்த வனந்தனைவரவழைத்த
மாயாவினோதனவன்
மாறிவேறுசூதுசெய்வன்

3 சர்ப்பக்கொடிபடைத்த தாணிபன் தனக்கெனது
தங்கைசுபத்திரையைத்தர
சம்மதமேசங்கையற (ஆனல்)

4 முடியாதென்றவனுரைத்தால் முடியாதுகாரியமே
முடிமன்னர்சூழ்ந்துவர
முடிவானமொழியைதர (ஆனல்)

பலராமன் விருத்தம்,

வில்வில்விஜயம்பெற்ற விதராசேவிரும்புமாப்போல்
மெல்லியர்ம்சுபத்ரைதன்னை வேந்தனுக்குநான்கொடுக்க
வல்லவாசம்மதித்தேன் மாதவனென்னைந்தன்னை
நல்லதுதானறிந்து நவிலுவேன்உள்ளவாரும்

வசனம்.

வில் விஜயம்பெற்ற விதா மஹாராஜனே. நின் விருப்பத்தின் வண்ணமே வெந்தர் வெந்தனுக்கு எந்த ங்கையைக்கொடுக்க என க்கும் விருப்பமே யென்றாலும், என் கனிஷ்டன் கபடநாடகனாகிய கண்ணன் எண்ண மெப்படியோ அன்னவனையழைத்து ஆராய்ந்து அப்பால் அறிவிக்கிறேன். போஜனங்கொள்ள எழுந்தருள்வீர் .

பலராமன் தரு.

(பக்திசாதிக்க விடாது)

அழைத்துவா என்தம்பியை இன்று நீ
அரைநொடிக்குள்ளாகச் சென்று
செழித்தவிதுரர்வந்த செய்தியையறிவித்து
எழிலுடன் சீக்ரமாக இங்கேநியொருமித்து
எதுதொழிலாகவு மிருந்தபோதிலும் நின்று
மாதவனை கண்ணன்தன்னை வாவென்று சீக்ரமின்று

பலராமன் வசனம்.

சேவக, நீ சீக்கிரம் சென்று எனது கனிஷ்டன் கண்ணனை இங்ஙனம் அழைத்துக்கொண்டுவருவாய்.

சேவகன் வசனம்.

அவ்வாறே அழைத்துக்கொண்டு வருகிறேன் அரசே.



கண்ணன் வருவது.

பார்ஸ் மெட்டு

பல்லவி.

வந்தனன் விந்தையாய் சிந்தைமகிழ்ந்து சுந்தர
நந்தகோபாலகிருஷ்ணன்

அநுபல்லவி.

1 பந்தமற்றதாயனும்
பாண்டவர்சகாயனும்
பக்தவற்சலன்பரி
சுத்தசிசலனந்த.

பார்த்தன்சாரதியான
தீர்த்சென்சனார்த்தனன்
2 தேவகிதன்மைந்தனும்
சீதரகோவிந்தனும்
தேவர்க்குந்தேவன்வாசு
தேவன்சேடசயனன்
திண்ணன்செங்கமல
கண்ணன்மேகவண்ணன்

3 சங்குசக்ரக்கையனும்
சாதுகட்குமெய்யனும்
சகலபரிபூரணன்
அகிலத்துக்குங்காரணன்
சண்டப்ரசண்டமுடன்
அண்டங்களையுண்டவன்
இதுவும் கண்ணன் தரு.

(மீனமர்பொய்கை நாண்மலர்கொய்தான் எ-வ-மெ.)

கண்ணிகள்.

(1) கோகுலதிலகன் கோபிகள் மதனன்
கோபாலகிருஷ்ணன் என்பவனயானே
ஆகுலங்காத்தவன் ஆகுயந்தீர்த்தவன்
ஆண்டவன் அருளினைப் பூண்டவன்றானே (கோ)
(2) காளிந்திடத்தில் காளிங்கன் படத்தில்
கழலடிபடநடங் காட்டி யவ்விடத்தில்
காளையர்பயமற கன்றுகள்மேய்த்துற
கருணைபுரிந்தரு ணாயகன்யானே (கோ)
(3) கருமுகில்வண்ணன் கமலசெங்கண்ணன்
கஞ்சனும்மாமனைக் காதியதிண்ணன்
திருமகளநாளும் திகழ்மறைப் பானும்
தேவகிசு தனும் தேவாதிவேன் (கோ)
(4) துறவிகணேசன் துவாரகைவாசன்
துளபமாலிகையணி சுயம்பிரகாசன்
பிறப்பிறப்பில்லாப் பீதாம்பரனும்
பிரமனையருளிய சீதரனும்

சேவகன் வசனம்

ஸ்வாமி, தங்கள் தமையன் பலராமச் சக்ரவர்த்தி தங்களை யழைத்துக்கொண்டு வரச்சொன்னார். எழுந்தருள்வீர் இறையே.

கன்னன் தரு.

(போ போமனே.)

வாரேனென்று நியும் சொல்
வாருடனே செல்
தீரமாகவே அதிசீக்ரமாகவேபதி
ஆருலமுகமான அண்ணரிடமிப்போதே
மாறுமனத்துடனே மகிழ்வாகயினிமீதே
என்னிட அண்ணாருக்கு எதுவாகினுஞ்சரி
துன்பமதைத்தீர்த்திட துரிதமாய்போவேன்தெரி

கண்ணன் வசனம்

சேவக, ஆனால் சென்று வருவோம்.

## கண்ணன் பலராமன் சம்வாதம்.

சம்வாதம்.

(அண்ணா அவமானை நானென்னவென்று சோல்லுவேன்
என்ற வண்ண மெட்டு)

கண்ணன்.

(அண்ணா யெனை யென்ன காரணமா யிங்கழைத்தது

பலராமன்

கண்ணா யின்றுன்னா லொருகாரிய மிருக்கின்றது

கணணன்

(2) என்னா லென்ன காரிய மதை சொன்னால் செய்கின்றேனே

பலராமன்

பொன்னேர் சுபத்திரைக்கு மணம்புரிய நினைக்கின்றேனே

கண்ணன்

(3) சரிதான் நமது தங்கைக்கு தகுந்த மணவாளன்யார்

பலராமன்

துரியோ தனனுக்கென்றெனை விதுரன்வந்து கேழ்க்கின்றார்

கண்ணன்

(4) சந்தோஷமே உமது மனசம்ம தமெப்படியோதும்

பலராமன்

சுந்தார் புயதுரிய னுக்கேதரவே யெண்ணமெப்போதும்

பலராமர் சந்த விருத்தம்

தங்கையாம் சுபத்திரைக்கு
தக்கதுரியோதிரன்
மங்களமணவாளன்தான்
மாநிலத்தில்வேறில்லை
இங்குவந்து விதுராராஜன்
இயம்பினுர்விபரமாய்
சங்கையில்லாவாறுரைப்பாய்
தம்பியே கோபாலனே

பலராமன் வசனம்

கண்ணு ! நமது தங்கை சுபத்திரைக்கு தகுந்த மணவாளன் வணங்காமுடிதரித்த மாசுணக்கொடியோனே அல்லது மற்றெந்த மன்னவருமீடாகார், மேலும் விதுரன் வந்துகேட்பதால் எனக்கு மனப்பூர்த்தியான சம்மத மேர்ப்பட்டது நின் விருப்ப மெப்படி விளம்புவாய் தம்பி.

கண்ணன் தரு.

இ-ம். பைரவி. தளாம்-ஆதி.

பல்லவி.

சந்தோஷமே நல்ல சம்மதமே அண்ணு யிவ்விதமே
சமாசமாய் செய்யுமே தகும் தகுமெனும் வையமே

சரணங்கள்.

1. சந்தேகமென்ன சரியினிமீது
தடையில்லை தங்களிஷ்டமிப்போது

சங்கையின்றிதாகம்
தங்கைசுபத்திரையை
திங்கள்குலமன்னனுக்கு
கிங்கிதமாக இங்கு

2. மதுரமொழி யுடையமகிதீரன்
மானிலமெங்கும் புகழும்விதுரான்

வந்து நமதிடம்பு
குந்து கேழ்ப்பதினுலு
கந்துக்கொடுத்திடும்
கிழ்ந்து புகழ்ந்திடவே

கண்ணன் விருத்தம்.

நாளைவந்துசுபத்திரைக்கு குற்றமுமேதுமில்லா
வணங்காதமுடியோனை மாசுணக்கொடியோனெனினும்
மணவாளன்தக்கவன்தான் மற்றெவரீடேயாகார்
அணங்கிற்றஎன்னசெய்திர் அதுபோலவெனக்குமிஷ்டம்

வசனம்.

அண்ணா! தங்கள் சம்மத மெவ்விதமோ அவ்விதமேநடக்கத் தடை யென்ன இருக்கிறது மேலும் சகல தேச ராஜர்களையும் தன் கோலக்கி தனிக்குடை நிழலில் தாரணியை புரக்கும் ஏக சக்கரேசனை சுயோதன மஹாராஜன் நமது தங்கைக்கு நாயகனானால்அது தங்கள் மனப்படி உத்தமந்தான்.

பலராமன் விருத்தம்.

உன்வார்த்தையோசித்தால் ஒன்றிலும்ஒட்டவில்லை
வன்மனக்கபடமான வழியதைநீகாட்டாமல்
நன்மையாயுன்மனதில் நாடியேவைத்தஎண்ணம்
என்னமோஅதைஎனக்கு இயம்புவாய்சீக்கிரமாக

பலராமன் வசனம்.

தம்பி, நின் வார்த்தையை யோசிக்கில் ஒன்றிலும் ஒட்டவில்லையே. கண்ணா, நின் கபடத்தைக் காட்டாமல் உள்ளத்தில் உள்ள உண்மையை உரைப்பாயப்பா.

கண்ணன் தரு.

(சந்திரனிறைந்த திருச் செந்தியி லமர்ந்த குருநாதா எ-வ-மெ)

கண்ணிகள்.

1 சந்திரகுலந்திகழவந்த சூரியன்தனக்குத்தானெ—நம்
தங்கைதனைத்தங்கிடுவாய் சங்கைப்படுவானே
சுந்தரமிகுந்தப்பெரியோனே
வந்தனம்புரிந்தேனே (சந்)

2 வந்தவர்மகிழ்ந்திடவே சிந்தையிலிசைந்தபடிநீரே—நல்
விந்தையுடன் முந்தவிடை தந்தனுப்புவீரே
நந்தமர்வியந்தடையுஞ்சீரே
சொந்தமொடு நேரே (சந்)

வசனம்.

அண்ணா, தங்கள் விருப்பத்திற்கு நானென்ன விரோதமாய் நடக்கப் பெரியவனா? யதுகுலத்தவ ரெல்லோரையும் விசாரித்து இஷ்டப்படி நடப்பீர்.

பலராமன் வசனம்.

கண்ணா, நீ கபடநாடகனாகையால் கவனிக்கவேண்டியதாயிருக்கிறது. இதில் நீமாத்திரம் கலகம் செய்யாமல் கலந்து நடப்பாயாகில் கல்யாணம் கைக்கூடும். சம்மதந்தானா.

கண்ணன்-தரு தன்யாசி-ஆதி.

விருப்பத்திற்குநானென்ன விரோதமாய்நடப்பேனோ
விசாரித்து செய்வீரே
அருமைபெருமையுள்ள அண்ணாவும்மிஷ்டப்படி
இக்கிறேன்சம்மதித்தால் இப்போதேயின்றைடி
சகலவிஷயந்தன்னை தலைமைபாகஎடுத்து
அகிலத்தில்நடத்துநீரோ அறியீரோ நீ ரடுத்து

கண்ணன் தரு.

இ-ம். இந்துஸ்தான் காபி. தாளம். ஆதி

கண்ணிகள்.

1 தலையிருக்கவாலாடுமா—உங்கள்
சம்மதமல்லாமல்கூடுமோ?
அலைகடலுலகினில் அண்ணாதங்களெதிரினில்
அடுத்துமீறிக் கடுத்துநேரில்
தடுத்துமாறி யெடுத்துக்கூறி (தலை)

2 தங்களிஷ்டத்திற் கென்சொல்வது—தெய்வ
சம்மதப்படி யாகுமது
தங்கைசுபத்திரைக்கும் சர்ப்பக்கேதனனுக்கும்
சரியாமகிழ் முறையாமதி
நெறியாமொழி யுரையாமண்ணில் (தலை)

வசனம்.

அண்ணா, அப்படி என்மேல் அருவருப்புப் படவேண்டாம் தங்கள் விருப்பப்படியே விதுராஜனை யழைத்து விடைகொடுத்தனுப்புவீர். திருவுளச்செயல்படி நடக்கிறது.

விதுரன் வருவது.

(சரணம் சரணம் பெரியோரே என்ற வர்ணமெட்டு)

பல்லவி

சரணம் சரணம் சாந்தர்களே
சமகுணமான வேந்தர்களே

அநுபல்லவி.

சரசமுடன்பல வரசருடன்
சாந்தனனே சாஷ்டாங்கமுடன் (சர)

சரணங்கள்.

1 அமரரும் முனிவர்களும் நிதம்போற்றும்
ஆகமவேதபுராணங்கள்சாற்றும்
அமலர்களே புகழ்நிமலர்களே
அற்புதமாகிய விமலர்களே (சர)

2 எப்படியோசனை செய்தீர்கள்
இருவருமெனக்கருள் புரிவீர்கள்
இலங்கிடவே சங்கை விலங்கிடவே
இத்தகைத்தெனமனந் துலங்கிடவே (சர)

3 சுபத்திரைக்கேற்ற மணவாளன்
துரியோதனனே குணவாளன்
துரிதமதாய் செவிக் கிரதமதாய்
சொல்லுங்கள் விளங்க சாதமதாய் (சர)

வசனம்

பலபத்திர பராக்ரமர்களேஎனது தமையன் துணையனுகிய சர்ப்பத்துவசனுக்கு தங்கள் தங்கை சுபத்திரையைத் தருவதற்கு எவ்வகை யோசித்தீர்கள் சங்கையின்றி சாற்றுவீர்கள்.

விருத்தம்.

அம்புவியனைத்தும்தானு யடக்கியே அரசுசெய்யும்
தம்பியேதுரியோதனன் தனக்குபெண்கேட்கவந்த
சம்பிரமர்க்கெதிரிடாது சந்தோஷமாகச்சொல்லி
நம்பிடச்செய்தனுப்பு நயமுடன்கிருஷ்ணனீயே

பலராமன் வசனம்.

தம்பீ, அம்புவி யனைத்தும் அடக்கி அரசு புரியும் அரசர்க்கரசனுன அரவத்துவசனுக்கு நம் பின்னவளைக்கேட்கவந்த இவர்க்கு நீ எதிர்மொழிகொடாது நிற்பது எனக்கு சந்தேகமாகவே யிருக்கிறது. உண்மையை உரைப்பாய் கண்ணு.

கண்ணன் தரு.

(அம்பாள் மதுரை மீனாக்ஷி என்ற வர்ணமெட்டு)

1 அண்ணாநின்னுரைதடுப்பேனா—அரு
வருப்புற நடப்பேனா—அவமதிக்க
அயற்கிடங்கொடுப்பெனா
அடுத்துக்கெடுப்பேனா (அண்)

2 மண்ணாள் மகிபனேயே நாடி—நம்
மகள் மணமலர் சூடி—மருவினால்
மனமகிழ்வோங்கூடி
மைத்துனமுறையாடி (அண்

3 சந்தேகமென்ன தங்சன்புரிவு—தன்
தமையனுக்குற்ற குறைவு—ஜகத்தினில்
தம்பிக்கில்லையோ வுறவு
தங்கையுடைய பரிவு (அண்)

வசனம்.

அண்ணா, தங்கள் எண்ணத்துக்கு ஒன்றும் விரோதமிராது விருப்பப்படி தாம்பூலங் கொடுத்தனுப்புவீர்.

பலராமர் சொல் கண்ணிகள்.

(ஆறுமுகவடிவேலவனே கலியாணமுஞ்செய்யவில்லை எ-வமெ.)

1 வேட்கையுடனேபெண் கேட்கவந்தவீர
வில்விதுரமன்ன—தங்கள்
விருப்பப்படியே நாங்கள் ஒருப்பட்டோமிருவரும்
வேறேசங்கதியென்ன (வேட்)

2 தாட்கழலார் துரியோதனனுக்கெங்கள்
தங்கையைதந்திடவே—நல்ல
சம்மதமே மணமவ்விதமே செய்து
சந்தோஷமூந்திடவே (வேட்)

3 கண்ணியமாய் கலியாணத்தை நடத்தும்
காரியத்தைப்பாரும்—அதைக்
கண்டுதேவருங் கைக்கொண்டுப்புகழ்ந்திட
விண்டுமதிதேரும் (வேட்)

4 புண்ணியங்கட்கெல்லாம் புகலிடமானசீர்
புகன்றதர்லொப்பினோமே—மன்ன
புன்மையறநாளும் நன்மையுறக்கேளும்
பூரித்து செப்பினோமே (வேட்)

விருத்தம்.

தங்களிஷ்டம்போலெந்தன் தம்பியுந்தானிசைந்தான்
திங்களும்தினகரன்றன் திசைமாறிவேறானாலும்
எங்கள்சொல்லுக்கிரண்டு இல்லைதான்கண்டீர்தானும்
மங்களவிவாகந்தன்னை மனதுடன்நடத்துவீரே

வசனம்

மன்னா தங்களனுமதிப்படியே என் இளையவனும் இசைந்தான் இனி திங்களும் தினகரனும் திசைமாறி திசை சூழ்ந்த போதினும் எங்கள் வார்த்தைக்கு இரண்டில்லை தீர்கமாக திருமணத்தைக்கூட்டுவீர்.

விதூரன்-கண்ணன்-பலதேவன-சம்வாதம்.

(இசைந்தசூலம் என்ற வர்ணமெட்டு.)

விதூரன்

1 இருந்து நீங்கள் இருதிறத்தோர்களு மியல்பாக—முன்
இசைந்து சேரில் இனிதருள் வீர்களிங்கிதமாக

பலதேவன்

1 இணங்கினேன் னிளையவ னோடினை வருந்தானே—நல
மிலங்க வேநல்லிசைவுடன் தாம்புலந் தருவேனே

விதூரன்

2 பொருந்த வேமுன் புரியுமுகூர்த்தமெத் தினங்கூறும்-இனி
புகழ்ந்து யாரும் புலன்மகிழ் கூர்ந்திட விடைதாரும்

பலதேவன்

2 பொருந்த வோதும புனிதபு ரோகித ரைவினவி-அவர்
புகன்ற நாளில் புரிகவி வாகமண் மிசைமேவி

விதூரன்

3 கருந்தன் மேகந்தனைநிகர் மேனியங் கனிவாய-உளங்
கனிந்து நீரும் கருத்தினை கூறுமங்களமேய

கண்ணன்

3 களிக்க பேரன் புடன்மணம் பேசமுன் கதித்தோனே-குறி
கடந்த தேவன் திருவுள மாகுமிங் கறுதானே

விதூரன்

4 அருந்து மாறன் றமருக் காரமுதளித்தோனே-குறி
யகன்ற நாதன் நினைவிட யார்மறை யழைத்தோனே

கண்ணன்

4 அகங்கொள் வீர்முன் னவனுரையான்மறுத்தறைவேனு-இவண்
அமர்ந்து சேரில் அருவருப்பாமுறை புரிவேனு

வசனம்

விதுர மஹாராஜனே எனது முன்னோனிஷ்டம் எனக்கென்ன கஷ்டம் தாங்கள் சென்று வருவீர்.

விதுரன் தரு.

(சத்தியசம்பன்னனே என்ற வர்ணமெட்டு)

பல்லவி.

போய்வருகின்றேனையா என்
புத்திரன்வா ழத்திருபு
ரதகிற்குநானித்தினமே (போய்)

அநுபல்லவி

தூய்மையோடெனக்கருள்புரிவீர்
சுகந்தருவீர் துரிதமாய் (போய்)

சரணங்கள்.

1 ஒப்புதாம்பூலம் உதவினீர்மேலும்
தப்பிதங்களொதுவிருந்தாலும்
சபைமூலம்தயை யெய்வீர் (போய்)

2 வந்தனங்தேரீர் மறந்திடப் போரீர்
வந்த என்முகந்தனைப் பாரீர்
மகிழ்கூரீர் வண்மையாய் (போய்)

பலதேவன் வசனம.

தம்பி, நாம் சபைகூடி அதிகநேரமானதால் அவரவர் அரண்மனை யடைவோமா.

கண்ணன் வசனம்.

சித்தம அண்ணா.

கண்ணன் தனி தரு.

(அம்பாள் மதுரைமீனுக்ஷி எ-வ-மெ.)

கண்ணிகள்.

1 தங்கைக்குகந்த மணவாளன்—தனஞ்
சயனே குணவாளன்—தளர்விலா
சாமபெறுந்தனுவாளன்
தகுந்த சுக வாளன் (தங்கை)

2 திங்கள் குலத்துதித்த தீரன்—நல்ல
திடமுள கெம் பீரன்—சிங்காரன்
திகழுமழகில் மாரன்
சிறந்தவலங்காரன் (தங்கை)

3 செங்கைக்கொண்ட காண்டீபன்—இந்த
ஜெகத்திலதிப் ரதா பன்—தீர்த்தயாத்
திரை சென்ற பார்த்திபன்
ஜெயவிஜய பூபன் (தங்கை)

கண்ணன் விருத்தம்

கன்னிகைசுபத்திரைக்கு காண்டீபன்கணவனல்லாற்
பின்பெவர்யாருமில்லை பி கு வின்றிசொன்னேனாலும்
என்னையேயறிந்திடாம விசையவேமணம்செய்விப்பாரோ
அன்னவள் மனதிநேராம் அறியவேசெல்வோமாங்கே.

வசனம்.

எனது தங்கை சுபத்திரை தொடித்தோளுக்கிசைந்த மணவன், விமனுக்கிளைய வில்விஜயனே அன்றி வேறெந்த வேந்தன் என்னையறியாமல்விவாகங்கொள்ளப் போகின்றா, ஆயினும் தங்கை சம்மதம் எப்படியோ விசாரித்துவருவோம்

சுபத்திரை வருகிற பொதுவிருத்தம்.

குயிலினைப்பழித்த வோசைக்குன்றினைநிகர்த்த கொங்கை
ஒயிலன்ன நடையையொத்த ஒண்டொடி மாதர்மெச்ச
மயிலினை வென்றசாயல் மதிமுகந்தள தளென்னப்
பயில்சுபத்திரை யென்றோதும் பான்மொழி வருகின்றாளே

சுபத்திரை வருகிற தரு.

பார்ஸ் மெட்டு
பல்லவி.

வந்தனளே விந்தையாய்
சுந்தரசுபத் திரையாள்

அநுபப்பவி

1 மந்த முயலில்லா மதி
வதனசிங் கார வதி
மங்கையாள்—மாயனுக்கு தங்கையாள் (வந்த)

2 மேருநிகர் தனங் குலுங்க
வெண்டாள வடமிலங்க
மேவியே சகிகளை
கூவியே (வந்த)

வசனம்.

சகி, என் முன்னவனுகிய முகில்வண்ணன் என்னமோ முகமலர்ச்சியோடு நம் அரண்மனையை நாடி அதோ வருகின்றார் வந்தனம் புரிவோம் வருவீர்கள்.

சுபத்திரை தரு.

(கண்ணுல் கண்டதை நாளும் எ-வ-மெ.)

பல்லவி

அண்ணு நின்றிருமலரடிக் கனந்தங் கோடி வந்தனம்

அநுபல்லவி

அனந்தங்கோடி வந்தனம்
அன்பாகவே தந்தனம்

சரணங்கள்.

1. கண்ணுயிரம் படைத்து
விண்ணுளிந்திரனிடத்து
தண்ணர் கற்பகத்தையிங் கழைத்த
தனியாய் செழித்த (அண்)

2. பெண்ணுயும்முடன் பிறந்தேன்
பெருமைபெருந்தவம் புரிந்தேன்
கண்ணு யெனைவளர்த்த செங்கமல
கண்ணு விமல (அண்)

3. பாண்டவரில் நடுபிறந்த
பார்த்தனெனும் பேர்சிறந்த
நீண்டல்விஜயற்கருள் சுரந்த
நேயம் பொருந்த (அண்)

4. சகிமார்களுடனே கூடி
சரசமாய்விளை யாடி
மகிழ்ந்திங்கிருக்குமெனை நாடி
வந்ததியாது தேடி

சுபத்திரை விருத்தம்

அண்ணா நீரெங்குவந்தீர் அன்பாக என்னைநாடி
கண்ணனே யாதோகூறும் கபட நாடகனே இன்று
வண்ணனே மலர்ச்சியோடு வந்தேனுன்றிரமாக
திண்ணமாய்க்கூறுவீரே தீனதயாளவந்தித்தேன்

வசனம்

அண்ணா, மரகதவண்ணா, செங்கமலக்கண்ணா என்னை நாடி இங்கு வந்தகாரணம்யாது திருவாய்மலர்ந்தருள்வீர்.

கண்ணன் சொல்வது.

சரணகமலாலயத்தில் என்னும்

(திருப்புகழ்சந்தம்.)

1. உனது திரு மாளிகைக்கு
உகவொ டிவ ணியா னடுத்த
துளதொ ருவி சேட மிக்க வுணர்வாயே
உலகு தனை யாளுங் கொற்ற
வுரக கொடி யோனுக் கிற்றை
உனையு ருதி யாய்கொ டுக்க வுரைத்தாரே

2. தனத னென தான டுத்த
தனவி துர ராஜன் செப்ப
தமையன் பல ராம னெப்பு கொடுத்தாரே
சமய மிது தான டுத்து
தரணி பனை மாலை யிட்டு
சரச முட னேசு கித்து தழைப்பாயே

கண்ணன் விருத்தம்

மணப்பருவ மாகிநின்றாய் மங்கையே எனதுதங்கா
குணவந்தர் நமது அண்ணா குறித்துமேவாக்குமீந்தார்
வணங்காமுடியோனுக்குன்னை மணம்செய்யவெண்ணி யின்று
இணங்கியேவிதுரருக்கு இனிவுடன்விடையீந்தாரே

வசனம்

அம்மா. என்னருமை தங்காய் உனக்கு மணப்பருவம் வாய்ந்திருப்பதால், நமது தமையன் முதல் யதுகுலத்தனைவரும் ஏகோபித்து ஆதிசூழலகை யாசுபுரியும் வணங்கா முடிபடைத்த மன்னர் மன்னனான மாசுணக்கொடியோனுக்கு உன்னைகொடுக்க மணம்பேசி விதுரனிடம் ஒப்புதாம்பூலம் கொடுத்தனுப்பி விட்டார் நின் விருப்பமெப்படி விளம்புவாயம்மா.

0-1892 M7V. N2>

சுபத்திரை தரு

(போனநாதன் வாக்கானோன் எ-வ-மெ.)

தாளம்-திரிபுடை.

**கண்ணிகள்**

1. என்னவார்த்தை சொன்னீரண்ணா
யேர்க்குமாயிதுமேகவண்ணா
பன்னகக்கெடியோனு மீடு
படுபாவியவன் கெட்டகேடு—நாடு (என்)

2. கண்ணாயிரம் பெற்றவன் றந்த
கண்ணாளனையன்றி யானந்த
கண்ணிலான் மகனையேற்பேனு
கண்ணெடுத்து தான்பார்ப்பேனு...வீணாய் (என்)

3. ஐயோதெய்வம் செய்சதியா
அல்லாதெந்தன் தலைவிதியா
ஐயாவுமக்கும் சம்மதியா
அண்ணன்பலராமன் மதியா—கதியார் (என்)

4. பாவியேன் பெண்ணாய் பிறந்தேன்
பாங்கெலாமின்றே ருண்டாகினேன்
ஆவியை போக்கினுல் சள்ளீ
அப்பாவில்லையீதென்னதொல்லை—தொல்லை(என்)

85892

விருத்தம்.

விஜயனை யன்றியண்ணா வீண்மதி துரியன்தன்னை
யிசைவுற யான்மணக்க எண்ணம் நீர் கொணடீரானல்
வசைமொழி யுலகோர்சொல்ல மாய்ப்பேனிவ்வுயிரைதங்கள்
மிசையிவை யாணையாக விளம்பினேன் விளங்கத்தானே

வசனம்.

அண்ணா. இதுவென்ன அன்னியாயம் சொற்ப வாழ்வையுடைய அற்பனாகிய சர்பக்கொடியோனையா எனக்குகந்த நாயகனென மதித்தீர்கள் உலகில் கன்னியர்க்கு கைநிறைந்தப் பொன்னைவிட கண்ணுக்கினித்தக் கணவனே விசேடமென்னும் பழமொழி கேட்டதில்லையா, நான் யார் என்ன சொன்னபோதிலும் அந்த ஆணழகனான விஜயனை யல்லது மற்றொருவனை மணங்கொள்ளேன் அண்ணா.

கண்ணன் விருத்தம்.

சற்பத்தின் கொடிபடைத்த தரணிபன் தாழ்ச்சியில்லா
நற்குணன் அவனேகண்டாய் நாடாளும் பாக்கியசாலி
பற்பலவெண்ணிடாதே பாவையே நீ மனம்வை
கற்பினைக்காத்துக்கொண்டு களிப்புடன் மணர்ந்துவாழ்வாய்

வசனம்

தங்கையே. சற்பக்கொடி படைத்த தரணிபன் தாழ்ச்சியிலா தாசாக்ஷி புரிபவன், தமையன் சம்மதப்படி நடப்பாயாகில் நன்மையுண்டாகும், ஆனால்.

கண்ணன்-சுபத்திரை

சம்வாதம்

(பெண்ணெ வேறே கதியேது—என்றவர்ணமெட்டு)

கண்ணன்

1. என்மேல்பழியை சுமத்தாதே—அண்ணன்
இஷ்டமன்றி யொன்றும் நடக்காதே
உன்மேல் விழைந்தவனிப்போதே—நல்ல
உத்தமன்துரியனைத்தள்ளாதே (என்)

சுபத்திரை

தள்ளுவீரந்தக்கொடுஞ்சொல்லை—சற்றும்
சம்மத மெனக்கவன் மேலில்லை
விள்ளுவீர்வெற்றிப்பெறும் வில்லை—கொண்ட
வீரனை மறந்ததென்ன தொல்லை (தள்)

கண்ணன்

2. தொல்லை யொன்றுமில்லை சற்பக்கொடியான்—எந்த
துரைகளையும் வணங்காமுடியான்
எல்லையில்லாப் பெருஞ்செல்வ நடையான்—மேலும்
எழில் தனரேகையுமுடையான் (தொ)

சுபத்திரை

தனரேகை யுள்ளவனானாலும்—உங்கள்
சம்மத மெப்படிப்போனாலும்
கனவினுங்கொள்ளே னொருக்காலும்—அந்த
காண்டீபனையல்லாது முக்காலும் (தன)

கண்ணன்.

3. ஒருப்பட்டானண்ணா னங்குப்பேச்சு—அம்மா
ஒப்புதாம்பூலமுங் கொடுத்தாச்சு
விருப்பப்படியேநட ஏச்சு—வரும்
வேண்டாம் விஜயன் மேல்பூச்சு (ஒரு)

சுபத்திரை.

பூச்சிக்காட்டவோ வந்தீரிப்போது—இது
போதுமென்னுட னென்னவாது
ஏச்சிலாமலுங் கட்கினிமீது—ஆவி
யிழந்துவிடுவேன் தவராது (பூச்சி)

விருத்தம்

அண்ணா உம்மாய்கைவேண்டாம் அவ்விஜயனை விடுத்து
கண்ணிலான் மகனின்தன்னை கருதிடேன் கனவிலும்யான்
எண்ணிடேன் மற்றோர்தாமு மெனக்குமேதமயராகும்
வண்ணா உன்சாட்சியாக மனங்கொள்ளேன் இதுதான் சத்யம்

வசனம்

அண்ணா, கார்கொண்ட மேனிக்காவலனையன்றி கண்ணிலான் மகனைக் கனவினுங்கருதேன். இதை தங்களாணையாகச்சொன்னேன், வீணாக என்னைவெறுப்பதிலென்னபயன் விலகுவீரண்ணா.

கண்ணன் தரு.

(இ-ம், காம்போதி. தாளம். ஆதி)

பல்லவி

தங்கையே நீசங்கைக்கொள்ளாதே—என்னை தாவி—மேவி
சஞ்சலப்பட்டுன் தைரியம்விட்டு (தங்)

அநுபல்லவி

சங்கையே நிகர்த்தவண்ணன்
தடம்புய திண்ணனம் அண்ணன்
சம்மதத்தை தள்ளியென் நண்பன்
தனஞ்சயனேவந்துனை
மணஞ்செய்யவே யோசனை
தனிலிருக்கின்றேன்
சரிமுடிக்கின்றேன் (தங்)

சரணம்.

(1) கபடநாடக சூஸ்த்ர
கண்ணன்யா னிருக்கும்போது
கவலைப்படுவ தேனம்மா
கற்பகமேகே ளிப்போது
விபவவைபோகமாக
வெகுவுபாயமாய்சாது
விதுரனும் வியப்படைய—நல்ல
வேடிக்கையாகிய
கேளிக்கைகளுடனே
நீடிக்கவிண்ணவருங்
கோடிக்க செய்வேன்மணம்
அயலிலெங்குஞ் சொல்லாதே—நம
தண்ணனுக்குக்கோபம்பொல்லாதே
கயல்விழியுன்சகிகளுக்கு மிதைக்கட்டுரைப்பாய்

கண்டிப்பாய்திட்டப் படுத்திக்கட்டழுகியே யிருப்பாய்
காலங்கொஞ்சம் போகட்டும்—அண்ணன்
காரியமெல்லாமாகட்டும்—அந்த

காவலன்துரியனேயே
கேவலமாகவேயிந்த
பூவுலகினிலெவரும்
ஆவலங்கொட்டிசிறித்துப்

புந்தியற்றவனேயென்று
நிந்தித்திடவே கலகம்
புரிகின்றேன்—சுகந்
தருகின்றேன்—புகழ்
பெறுகின்றேன்—சென்று
வருகின்றேன்—அந்த

பூர்த்தியானகண்ணிய
நேர்த்தியுடன்புண்ணிய
தீர்த்தமாடநண்ணிய
கீர்த்திப்பெற்றதிண்ணிய
பார்த்தனேக்கண்டெண்ணிய
வார்த்தைகளேச்சொல்லி

பக்குவப்படுத்தியிங்கு
தக்கப்படிவரவழைப்பேன்
எக்குவலயத்துமுந்தன்
நற்குணந்தழைக்கவைப்பேன்

இழைந்து
விழைந்து
குழைந்து
தழைந்து

எண்ணமங்குக்கொண்டிருக்கும்
அண்ணன்பலராமனுக்கும்
இஷ்டமுண்டாகும்விரகே—செய்வேன்
எல்லாமுடிந்தபிறகே—அந்த

இந்துகுலந்திகழ
ஐந்துமைந்தரைப்பெற்ற
குந்தியெனும்நமது
சொந்தவத்தைதனக்கு
வந்தமருமகனீயே
நிந்தையில்லையெனசொல்ல
இந்தவிதம்செய்யாவிட்டால்
எந்தன்பேர்மாயனுமல்ல (தங்)

கண்ணன் விருத்தம்

அதற்காக நீயும்வாடி அஞ்சிடவேண்டாம்புண்ய
வதியுனையான்சோதிக்க வந்திட்டேனிளகிடாதே
மதியிலான்தனக்கு உன்னை மணமதுசெய்யமாட்டேன்
இது சத்யம்பிசகமாட்டேன் இன்பமாயிருப்பாய்தங்கா

வசனம்.

அம்மா, நீ அதற்காக அஞ்சவேண்டாம். உன் எண்ணம் எவ்வண்ணம் இருக்கின்றதென சோதிக்க வந்தேனே அன்றி பூனை வாயில் கிளியைக்கொடுப்பதுபோல் துஷ்டதுரியனுக் குனைக்கொடுக்க எனக்குமிஷ்டமில்லை, இனியொரு கஷ்டமில்லாமல் நின்கருத்தின்படியே காண்டீபனுக்கும், உனக்கும் கல்யாணத்தை முன்னின்று முடிக்கின்றேன். இன்றேல் என்பேர் கபடநாடகனல்ல, இது சத்தியம், நீ சஞ்சலப்படாதே தங்காய்.

சுபத்திரை தரு
(ஆண்டவன் விதிப்படிக்கு எ-வ-மெ.)

கண்ணிகள்.

1. அண்ணா நினையன்றியெனை
யாதரிப்பாரிலையையனே
விண்ணூருமேகந் தனை
வென்ற திரு மேனியனே (அண்)

2. அத்தைமகனாக வந்தும்
அத்தானுக்கிலாத சொந்தம்
சொத்தைக்கண்ணன் பிள்ளைக்கு முந்தும்
சுதந்தரமென்ன பந்தம் (அண்)

3. பார்க்கின்றாரண்ணன் மெள்ள
படுகுழியிலென்னை தள்ள
ஏர்க்குமாயிவ்வெண்ணங்கொள்ள
எனக்குமுன் சம்பவித்துள்ள (அண்

4. உள்ளுக்குளுமக்கிருக்கும்
உண்மையை சொன்னீரெனக்கும்
எள்ளுக்குளெண்ணெய் போலெங்கும்
இடமறநிறைந்திலங்கும் (அண்)

சுபத்திரை விருத்தம்.

பனைக்கொடியுயர்த்தோனந்த பாந்தளங்கொடியோன்றன்னை
நினைத்தனனெனக்கீடாக நீயதைமறுத்துப்பார்த்தன்
தனைமணமகனுய்க்கொள்ள தயைபுரிந்தருளவேண்டும்
அனைத்துயிர்வேண்டும் வண்ண மளித்தலுன்செயலதன்றோ

வசனம்

அண்ணு, செங்கமலக்கண்ணு, இவ்வண்ணம் கருணை புரிவீராயின் ஏழையாள் உயிர்வாழும், இன்றேல் இன்றே பொன்றும் கடாக்ஷிப்பீர் கருமுகில் வண்ணு.

கண்ணன் தரு.

(பார்ஸ் மெட்டு)

**கண்ணிகள்.**

1. நான்போய் வருகின்றேன்—அந்த
நலமுளதவமேதனமெனமனதினில்
இலகுடனெண்ணுமவ்விறையவனிடத்தினில் (நான்)

2. பான்மொழி சுபத்திராய்—அது
நான்முகன்விதிப்படிதான் முடிந்திடுமென
தேன்மொழியாருடன் நீ மகிழ்ந்திருப்பாய் (நான்)

3 சொல்லால்போனதென்ன—இவை
யெல்லாமண்ணனெண்ணியதம்மா
யென்னால்முடிந்திடுமினியிருசும்மா (நான்)

## அருச்சுனன்

# சன்னியாசியாய் வருகிற

பொதுவிருத்தம்.

தீர்த்தயாத்திரையாய்சென்று தென்மதுரையினிற்றங்கி
காத்திருந்தங்குசித்ராங் கதையெனும் பெண்ணைசேர்ந்து
பூர்த்தியாய்துவாரைத்தேடி பூவைசுபத்திரையைநாடி
பார்த்தன்கோகன்னமென்னும் பதிநீங்கிவருகின்றானே

அர்ச்சுனன் விருத்தம்.

வந்தனம் மேகவண்ணா வாசுதேவா நினைந்து
இந்தகல் வேளைவந்தேன் இஷ்டமாயென் கோபாலா
சுந்தரி யுமது தங்கை சுபத்திரை தன்னைநாடி
வந்திட்டேன் தடைசெய்யாமல் மாமணம் செய்குவீரே.

வசனம்

வந்தனம் கோபாலா இதுநாள்வரை தீர்த்தயாத்திரை சென்று உமது தங்கைமேல் மனதாகி ஓடோடியும்வந்தேன் மணம்செய்விக்க தடையேனுமுளதோ என்ன சீக்கிரமாகட்டுமே கல்யாணம்.

(இ-ம். இந்துஸ்த்தான் தோடி, தா-ம். ரூபகம்)

பல்லவி

வருவாய் கண்ணனே
மரகத வண்ணனே

அநுபல்லவி

தருவாய் நின் தரிசனம்
தயாபரனே யிங்ஙனம்
சந்நியாசியான யென்னைசாரவேமனம் (வரு)

சரணங்கள்.

1. தீர்த்தயாத்திரை சென்று
தீர்ந்த துவாரைக்கின்று
சேர்ந்தேன் சுபத்திரையை சேரவேநன்று (வரு)

2. ஆதிமூலமேயென்று
அழைத்தயானைமுன்சென்று
காதி முதலைபைவென்று காத்தவாயின்று (வரு)

3. சங்குசக்கர கரனே
சகியேனுபேந்திரனே
தங்கவேலன்பணியுந்தரமோதானே (வரு)

அருச்சுனன் அகவல்

அரி ஹரிமுரஹரி நரஹரியருள்புரி
கரிமுறையிடமுனே காத்தகாகுத்தனே
அச்சுதானந்தனே அமலகோவிந்தனே
பச்சைமேனியனே பாரளந்தவனே
பத்தவற்சலனே பரமநிச்சலனே
முத்தருக்குகந்த முகுந்தவைகுந்தனே
முன்வந்தருளுவாய் மூவுலகுந்தொழும்
சின்மயானந்தனே தேவகிமகிழ்ந்திடும்

இதுவும் அருச்சுனன் துதிதரு.

(சோமசேகரனருளும் பாலா வேலா எ-வ-மெ)

பல்லவி

மாதவா மது சூதனமாயாதுயா-சீர்
மாமறையைக்கூறியருள்வாயா நேயா-அருள்

சரணங்கள்

1. பூதனையுயிரதனைப்போக்கினேனே-பூவில்
சாதனமிலா மூடரைத்தாக்கினேனே-சாமி
சோதனை செய்யாமல் சுகந்தேக்கினேனே-பல
வாதனை தீர்த்தெம்மை மகிழ்வாக்கினேனே-மகிழ் (மா)

2. மாமனைவதைத்துயிரை வாட்டினேனே-அந்த
சோமனையளித்தருளை சூட்டினேனே-தோழன்
வீமனுய்ய வேசியைக்காட்டினேனே-வெய்ய
காமனையளித்துக் காதல் மூட்டினேனே-துயி (மா)

3. மாதுசுபத்திரையினல் வாடுகின்றேன்-என்னை
பாதுகாப்பா யென்றுநின்னைத்தேடுகிறேன்-எந்த
போது முந்தன் பாதத்தையே நாடுகின்றேன்-துதி
யோதுந்தங்கவேலன் பாதம் பாடுகின்றேன்—எமது (மா)

வசனம்

அன்று வஞ்சக நெஞ்சனுன மாசுணக் கொடியோன் மனதுக்கி சைந்த மாபாவி கண்ணிலான் கட்டளையால் அடியேங்கள் ஐவ ரும் காண்டவப் பிரஸ்தமென்னும் கானகமடைந்து கலங்கா நின்ற காலத்தில் வந்து இந்திரனைக் கொண்டு இந்த்ர பிரஸ்தமென்னும் நகரை நிருமித்து நிலைநிறுத்திய நீலமேக சாமளவண்ணு நாங்கள் நீதியோடரசளித்து வரும்நாளில் ஒருநாள் நாரத முனிவர் வந்து எங்களைந்துபேரையும் நோக்கி நீங்களைவரும் ஓர் நேரிழையை முறை யின்றிப்புணருவது முறையன்று எனவும் முன்னோர் சிலர் இப்ப டி மோகத்தில் மூழ்கி முரணெய்தினரெனவும் மொழிந்து நீங்களை வரும் ஒவ்வொரு வருடத்திற்கு ஒவ்வொருவர் தவணைவைத்து தழுவுவது நன்மையெனவும் இதில் ஒருவர் முறையில் ஆண்பெண் இருவரும் இணங்கி யிழைந்திருக்குங் கால் மற்ருெருவர் கண்ணுற்றால் ஓராண்டு யாத்திரைச்சென்று வரவேண்டுமெனவும். திருவாய் மலர்ந்தெழுந்தருளினர். அதுமுதல் ஐவராகிய யாம் அவ் வாறே அனுசரித்து வரும்நாளில் தருமர் முறைநாளில் ஒருநாளில் ஓரந்தணராபத்தால் ஆயுதமெடுக்க அந்தப்புறமடையுங்கால் அங்கு என்தமையன் தருமரும் திரௌபதியும் சரசசல்லாபமாக இருக் கும் தாளிணைப்பார்த்து வெட்கி வில்லேந்தி வெளியேவந்து வேதி யர் குறையைதீர்த்து யாத்திரை நாடி வருங்கால் நாகலோகஞ்சென் று நாகக்கன்னியை மணந்து இராவானென்னு மைந்தனைத்தந்து மா னிலம்வந்து மதுரையடைந்து சித்ராங்கதையை திருமணங்கொ ண்டு பப்புருவாகனென்னும் பாலனையீன்று குலமுனிவரோடு கூடி கோகன்னம் நாடி யீசனைப்பாடியிருக்கின்றபோது இளங்கொடி சுப த்திரை யென்பவளிப்போது மணப்பருவத்தை வாய்ந்தனளென்று செவியுறக்கேட்டு திருமணம் கேட்டு திரிதண்ட சன்னியாசத்திரு க்கோலம் பூண்டு இரைவதகிரியில் யான்வந்து சேர்ந்தேன் நின் பாதாம்புயத்தை தெரிசிக்க விரும்புகின்றேன்.

இதுவும் அருச்சுனன் துதி தரு.

(இ-ம். இந்துஸ்தான் தோடி தா-ம். ஆதி.)

பல்லவி

ஸ்ரீ நரஹரி முரஹரியாகிய கிருஷ்ணு
நாகராஜசயனு நளினமலர்நயனு
நாகராஜசயனு

அநுபல்லவி

தேனமர்ந்த துளபமாலே
தேவனேநின்றிருத் தாளே
தியானித்தேனுனிந்த வேளே
சேரசுபத்திரை யாளே (ஸ்ரீ)

சரணங்கள்.

1. வேத கீதே ரூப சாரா
விதநவநீத சோரா
வேதனுதியோர்க்குந் தேரா
விமலனே தேவகி குமாரா (ஸ்ரீ)

2. சங்குசக்ர மேந்தும்நீதா
சச்சிதானந்த விநோதா
தங்கமேவலனேற்றும் பாதா
சாமி யெந்தன் மீதுவாதா (ஸ்ரீ)

கண்ணன் தரு.

(சர்ச்சனர்கள் கொண்டாடும் எ-வ-மெ.)

பல்லவி.

அந்தண சன்னியாசியே யாமநேகவந்தனம்

அநுபல்லவி

வந்தனம் அநேக வந்தனம்
அன்பாக அன்பாக அன்பாகவே

சரணங்கள்

1. எந்நகர் வாசமோ
இருப்பதெந்த தேசமோ
என்பாக்ய மென்பாக்ய மென்பாக்யமே (அந்)

2. திரிதண்ட கமண்டலமும்
செங்காவியுடைகலமும்
தெரிசிக்க தெரிசிக்க தெரிசிக்கவே (அங்)

3. எங்கள் குலம்புரிதவமோ
இன்னமெந்த சம்பவமோ
எழிலாக எழிலாக எழிலாகவே (அங்)

வசனம்-

ஸ்வாமி, சாஷ்டாங்கம் நமஸ்கரிக்கின்றேன்

அருச்சுனன் வசனம்

வாழி வாழி நீடூழியாக வாழக்கடவாய்.

கண்ணன் அருச்சுன்ன சம்வாதம்.

(பார்ஸ்மெட்டு.)

கண்ணன்

1. எந்தநகரிருக்கும் சன்னியாசி

அருச்சுனன்

இந்திர ப்ரஸ்தமே

கண்ணன்

2. இந்தநகர்க்கெழுந்தருள
என்னதவம் நான்செய்தது

அருச்சுனன்

ஏனோஇப்பரிகாசம் செய்வது

கண்ணன்

3. இல்லையென்னப்பரிகாசம்

அருச்சுனன்

எல்லாந்தெரியுமுன்மோசம்

கண்ணன்

4. எல்லாந் துறந்தவர்க்கென்னமோசஞ்செய்தேன்
ஏழை யெனக்கருள்வீர்

அருச்சுனன்.

எங்காணுமைத்துனரே யென்னையிப்படி
பின்னமும் சோதிக்கின்றார்

கண்ணன்

5. இதுவென்னவதிசயந்தவமுனியே

அருச்சுனன்.

இயம்பிடுவேன் கேழ்ப்பீர் தனியே

கண்ணன்

6. எத்தகையாலென்னை மைத்துனனென்றொரு
மித்தழைத்திடுகின்றீர்

அருச்சுனன்.

என்னையருச்சுனனென்றறிந்திருந்து
மேன்பரிகசிக்கின்றீர்

கண்ணன்

7. எங்கிருந்தெங்குற்றீர் நேமமாய்
இருக்கட்டும்|நீ நல்லக்ஷேமமா

அருச்சுனன்.

இன்னிலமேலே நின்னருளாலே
யிருக்கின்றேன் பூமா

வசனம்.

கேளும் மைத்துனா, தங்கள் கிருபாகடாக்ஷத்தினாலே நானும் க்ஷேமமாகவேதான் இருக்கின்றேன்.

கண்ணன் தரு.

பார்ஸ்மெட்டு.

**கண்ணிகள்**

1. இக்கோலங்கொண்டதென்னா
யேங்காணுமோய்மைத்துனா
முக்கோலுங்கமண்டலமும்
முப்புரிநூலும் விளங்க (இ)

2. எக்காலத்திலும் பெண்கள்
இன்பசு கந்தனைமறவாய்
இக்காலமதை மறந்து
எங்கனிருப்பாயறைவாய் (இ)

3. முக்காலங்களுமுணர்ந்த
முனிமகனிடம்போன
அக்காலனையுதைத்த
அத்தனுக்குமருமையான (இ)

4. தொல்லை சமுசாரந்தன்னை
துறந்தபெரியோனுன்னை
எல்லையிலெப்படிமறப்பேன்
எத்தகைப் பிரிந்திருப்பேன் (இ)

கிருஷ்ணன்

அருந்தவவேடமாகி அர்ச்சுனா மரத்தின்கிழே
வருந்தியே யிருப்பதென்ன வகையதைக் கவலையின்றி
திருத்தமாய் நீயுரைப்பாய் திவிரமாயெனக்கு
கருத்தினி லொளியாமற் சொல் காரணந்தன்னைநீயே.

அர்ச்சுனா நீ, ஆடம்பரமான அரசுவேடத்தை நீங்கி அருந்தவ வேடந்தாங்கி இவ்வால விருக்ஷத்தின் கீழ் அமர்ந்திருக்குங் காரணம்யாது கூறுவாய்.

அருச்சுனன் தரு.

(உனக்கென்னடி கேடுகாலம்வந்தது. எ-வ-மெ)

பல்லவி

மணிவண்ணனே செந்தாமரைக்கண்ணனே

அநுபல்லவி

துணிவுக்கொண்டிவ்வேடந் துலங்கக்கொண்டதைதானே
தூயாசெங்கனிவாயா சொல்லக்கேழ்ப்பீர்யானே

சரணங்கள்

1. நாரதர் சொற்படியேநாடி—கண்ணா
நான் தீர்த்தயாத்திரைச்சென்றுடி
சீரது நண்ணியே சேர்ந்தேனிப்படிதனில்
திரிதண்டந்தாங்கியே திருக்கொள்ள முடிவினில் (ம)

2 மழையிலடிப்பட்டு வந்தேனே—பாவி
மன்மதனால் மனம் நொந்தேனே
தழைத்தோங்கு மிவ்வால மரத்தடியிற்றானே
சன்யாசியைப்போலத்தனியாகவேநானே (ம)

3 உம்மையிங்கனந் தியானித்தது—ஒன்
றுள்ள தும்மாலாக வேண்டியது
எம்மையாட்கொண்டருளுமெம்பெருமானே
எங்களன்னைக்குந்திக்கிசைந்த மருகோனே (ம)

அருச்சனன் விருத்தம்

ஒருகாரணத்தினாலே ஓடிசந்யாசியாக
திருவடிக்காணவந்தேன் தேவரீர்தன்னைநாடி
பெருமையாய் நீருமின்று பேசாமல் எந்தனிட
கருத்துபோல் பூர்த்திசெய்வாய் கண்ணனே கமலவரதா

வசனம்

மைத்துனா ஒருகாரணமாக இந்த திரிதண்டசன்யாச வேடம் பூண்டு தேவரீரைத்தேடி திருவடியைநாடி வந்தேன் என் எண்ணத்தைப் பூர்த்தி செய்யவேண்டுங் கண்ணா.

கண்ணனுக்கும் அருச்சுனனுக்கும் சம்வாதம்.

(கண்ணுயிரம்படைத்து எ-வ-மெ)

கண்ணன்

1. எங்கும் புகழ்படைத்த திங்கள்குலத்துதித்த
எழிலுளபொற்சிலை தொழிலதில்மெச்சிடு மர்ச்சுனா
எனதிடமுற்றது யெதுசொலடுத்தது மைத்துனா

அருச்சுனன்

அங்குமிங்குந்திக்கு மெங்கும் நிறைந்திருக்கும்
அரிஹரியச்சுத முராஹரிசெப்பிடக் கேளுமே
அகமகிழ்வுற்றிட சுகமதுபெற்றிட நாளுமே

கண்ணன்

2- அல்லும்பகலுமுற்றுஞ் சொல்லுஞ் சொற்படி பற்றும்
அருமைதொழிற்புரிந் தருளெனிடத்தினிலுள்ளதை
அறியவுரைத்திடில் லாக்குவோமித்தறி விள்ளதை

அருச்சுனன்

வெல்லுமைமங்கணைக்கன்னல்வில்லுங்கொண்டவனின்னல்
விளைத்திடும் வெற்றியைவிரைவினில்செற்றிடவேண்டுமே
விரை குழலச்சுபத்திரையைகொடுத்தரு ளீண்டுமே

அர்ச்சுனன் விருத்தம்

மன்மதனாலே கெட்டேன் மலர்க்கணையாலே பாவி
என்னையும் வருத்துரானே இதற்கென்னசெய்வேனானே
பன்னகசயனா யின்று பாது நீர்காக்கவேணும்
பொன்னடிகளையேநானே போற்றினேன் கிருபைவையும்

மைத்துனா, மன்மதன் மலர்க்கணைகளைத்தூவி வருத்துகின்ருன், அந்தவாட்டந்தீர நின்கருணா நாட்டம் வைக்கவேண்டும் நளின மலர் நயனா.

கண்ணன் விருத்தம்

நீ வருந்துவதைப்பார்த்தால் நெஞ்சமும் பதறுதையோ
மூவாசையை வெறுத்த முனிபுங்கனாகி காம
ஆவலாய்க்கலங்கலாமோ அழகாமோ நீதுமக்கு
தாவிடும் விஷயமென்ன சாற்றிடும் உண்மையாதோ

கண்ணன் வசனம்

ஆ-ஆ-இதுவென்னவதிசயம் மானிலத்தில் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை யென்னும் மூன்றாசையும் முறையே துறந்த முனிபுங்கவனாகிய நீர் காமபாணத்துக்குக் கலங்குவதழகோ மைத்துனா, நீர் என்ன பித்தனைப்போல் பேசுகின்றீர், இந்தவேடம் நிஜவேடமா? அல்லது கள்ளவேடமா? உண்மையை யுரைப்பாய்.

அருச்சுனன் தரு

(பார்ஸ் மெட்டு)

பல்லவி

மேககாத்திரனே—ஸ்திரனே
போகசற்பாத்திரனே

அநுபல்லவி

ஆகுமுன்றங்கையழகுடையாளை
அணைந்திடவே வந்தேனிந்தவேளை
பாகுகனிமொழிப்பகர் வாயாளை
பாவைசுபத்திரையெனும் பெயராளை (மேக)

சரணம்

1 பூவையவளும் யானும்புவிமேலே
பொருந்திவாழ்ந்திட வொருமனம்போலே
ஆவல்கொண்டே னுமதருளாலே
ஆகவேண்டும் பரிணயந்திருமாலே (மேக)

அர்ச்சுனன் விருத்தம்

மங்கையாள் சுபத்தரா தன்னை மணங்கொள நானிருக்க
அங்ஙனம் துரியனுக்கு அருள்வாக்கு தருகலாமோ
இங்குற்றேன் கேள்விப்பட்டு இதுநீதியாமோகாணும்
பங்கஜதளனுமோசம் பார்த்தன்மேல்செய்யலாமோ.

வசனம்

மைத்துன, தங்கள் தங்கை சுபத்திரையை மணக்க சுதந்திரமுள்ள விஜயனுகும் யானிருக்க கொடியவிடநாகக்கொடி யோனுக்குக் கொடுக்க நீங்களொப்புக்கொண்டதாக கேள்வியுற்று யதுகுலத்தோர் எனக்குத்தர இணங்காரென யதியாகிவந்தேன் அந்த இளங்கொடியாளெனக்கே யிணங்க கடாக்ஷிக்கவேண்டுங் கண்ண

கண்ணன் தரு.

(இ-ம். மோகனம். அட தாளம்.)

பல்லவி

தருமா பீமதகுமா சொல்லத்
தருமா செவிப்புகுமா புகழ்
மகவான்மகிழ்மகனேயிது (த)

அநுபல்லவி

சுகசாதனபணிகேதனதுரியோதனமகாராஜனே
ஜகமீதுவஞ்சகமோசஞ்செய்வதை யெப்படியுன்சொற்படி (த)

சரணம்

1. நதியின்வழிவந்தாடிய நாகாதிபன்மகள்போகமும்
மதுராபுரியரசாள்பவன்மகள்சித்ராங்கதைபோகமும்
யதிராகவேறுகர்வாயது போதுமெப்போதுமிது (தகு)

வசனம்.

போதும் போதும் நீ இந்திரன் மைந்தனென்பதை நன்றாகவிள க்கிக்காட்டினாய். நல்ல புத்திசாலிதான், நீ கருதி வந்த காரியம் கன விலும் நடக்காது, நல்லபடியே போய்விடு என்தமையன் பலராம்னறி ந்தால் தலைபோய்விடும், இந்த சங்கதியைக் குறித்துபேசாதே தா மதமாகின்றது நான் செல்லுகின்றேன்.

கண்ணன் அருச்சுனன் சம்வாதம்,

(இதர்க்கெப்படி யோசிப்பேன் எ-வ-மெ)

அருச்சுனன்

1, இப்படி சொன்னாலெப்படி
யென்னுயிர்நிற்பதுநற்படி
மெய்ப்படியப்பொற்பனைக்கொடி
விளங்குமுமதண்ணன்சொற்படி
மேவியே மேவியே மேவியேயெனை யோவியே (இப்)

கண்ணன்

ஓவியம்போல் யோகத்தில்நின்று
உலகாசையைமறந்தாயென்று
தாவிதுரியனுக்கேதா
சம்மதித்தோ மதைத்தவற
சரியல்ல சரியல்ல சரியல்ல தடுத்துசொல்ல (ஓவி)

அருக்சுனன்

2, சரியல்ல நீரவ்விதஞ்சொல்ல
தையல் சுபத்திரையைபுல்ல
துரியோதனனுக்கழகல்ல
சொந்தமைத்துனனிருக்கநல்ல
தூயவா தூயவா தூயவா கொல்லும் மாயவா (சரி)

கண்ணன்

மாயக்கள்ளவேடங்கொண்டுநீர்
வந்ததைக்கண்டாலெம்மனோர்
பேயனேநின்மேல் கோபிப்பார்
பேசமறப்போம் வழியைப்பார்
பெருமையாய் பெருமையாய் பெருமையா யருமையாய் (மா)

கண்ணன் விருத்தம்

புரந்தராகண்ணவேடம் பூண்டதோர் காரணத்தை
அறிகுலயதுவம்ஸத்தோல் ரறிந்திட்டால் கலகமன்றோ
தெரியாததற்குமுந்தன் தேசமே சென்று நீறும்
மரியாதையாகவாழும் வஞ்சகம்வேண்டாமன்றே

வசனம்

பற்குண நீ கள்ளவேடம் பூண்டுவந்த காரணத்தை யென்தமையன் பலதேவன் முதலான யதுகுலத்தோர் கேள்வியுற்றால் விபரீதகலகம் விளையும். வீணசைப்பட்டு வெதும்ப வேண்டாம் மரியாதையாக வந்தவழியைபார்.

அருச்சுனன் தரு

(அம்பிகாநின்மகன்குகன் என்றவர்ணமெட்டு)

பல்லவி.

நந்தகோபன்மகன் என
வந்தகோவிந்தநின் மனம்

அநுபல்லவி

இந்தவ றிசைந் திருந்தால்
ஏதுபுரிவேன் பிறந்தால்
அந்தவாறெனை மறந்தால்
ஆவிபூவில்மேவிடாதுகேள் (நந்)

சரணங்கள்

1. அத்தைமகன்யானிருக்க
ஆகுமோசொல்லெனைவெறுக்க
சொத்தைக்கண்ணன் சுதன்சிறக்க
தூயநேயஞாயமாகுமா (நந்)

2. மாரன்கணையாலே மனம்
வாடுகின்றேனேயிங்ஙனம்
சோசுபத்திரையை மணம்
தேவரீர்செய்தாலுய்வேனுயிர் (நந்)

வசனம்.

மாதவா, என்விஷயத்தில் இப்படி சொல்வது தங்களுக்குதரு மமன்று, எப்படியாவது தயைசெய்து தந்திரமாக நின்தங்கையை தருவாய்.

கண்ணன் தரு

(பரமானந்தமெய்ப்பரங்குன்றோன்-எ-வ-மெ)

பல்லவி

மரியாதையாகவந்தவழியே—மறைந்தோடிநின்றால்
தரியாதிக்கணம் வரும்பழியே

அநுபல்லவி

அரியாசனமிருதிகிலமுங்காக்குந்
நரியோதனனெனுந்துரை தனக்கேர்க்கும்
சரியாகுமிது சம்மதம் யார்க்கும்
பரிகாசமேஉன் பக்ஷமே தோர்க்கும் (மரி)

சரணம்

1. சங்கவண்ணகனன் அண்ணன்சொல்லே—தம்பியாகியநான்
தடுத்துசொன்னால் வருமேதொல்லே—சற்றேனுமெங்கள்
தங்கைக்கு முன் மீதிஷ்டமில்லே—தனஞ்சயா நீ
தஞ்சமென்றாலுங்காட்டிப் பல்லே—சாயதென்னாலே
தஞ்சமென்றாலுங்காட்டிப் பல்லே—சாயாதென்னாலே
சாந்தாபமுண்டாகுஞ் சிந்தாகுலந்தான் பெறாதே
சன்னியாசிபோலே
வந்தாமலர்ந்தாய்மணந்தான்விழைந்தே வராதே
வானளிந்திரன்
மைந்தாநி ஜந்தான நிந்தூர்விரைந்தே குறாதே
மர்மத்தையென்முன்

வதமேதானு ணர்ந்தால்வ ருந்தீங்கிருந்தா வீராதே
மையால் மீருதே
மகிபார்க்குரியவழிகொண்வடாழுகு சென்று
மாறிலாதிந்த
மறையுமுருவோடரிய முறையில் நின்று
மாநிலமுதல்
அகிலமுனை யருந்த வமுனி யென்று
ஐயங்கொள்ளாமல்
அடிவணங்கிடும் படி நடப்பதேநன்று
யதுகுலத்தோர்
ஆயிரங்கண்ணுடையானுக்குதிருநாள்
அகமகிழ்ந்தவ்விழைவதசுத்தகமென்றுநாள்
சேயிழைமாருடன் செய்திட வருநாள்
செவிகொளின்றிரவிது சென்றிடின் மறுநாள் (மரி)

கண்ணன் விருத்தம்

இது என்னாலாகாதப்பா இதற்குநானென்னசெய்வேன்.
யதுகுலத்தோரிதற்கு இசைந்திடார் மேலும்நாளை
உதயத்திலிந்த்ரபூஜை ஓங்கியேசெய்யவாரார்
எதிரினிலிருப்பாயாகில் ஏதேனும் நேரும்தீங்கே

வசனம்

மைத்துனு, நீ ததிங்கணத்தோமெனதாண்டவஞ் செய்தாலும் யாதொருவருக்கும் சொல்லிசெய்யமுடியாது யதுகுலத்தோர் இசைந்திடார் மேலும் நாளை இந்திரனுக்குப் பொங்கலிடுவதற்கு இவ்வழியாக வருவார்கள் அவர்களறியின் ஆபத்தாய் முடியும்உண்மையை உணர்த்தினேன் ஜாக்ரதையாய் ஓடிப்போ சீக்கிரம்.

அருச்சுனன் கண்ணன் சம்வாதம்.
(அய்யாயிது ஞாயமா எ-வ-மெ)

1. அரு:— கண்ணுயிதுன் மாயமா
கண்:— கலகஞ்செய்ய ஞாயமா
2 அ:— முன்னுவிரு பாயமாய்
கண்:— முடியாதுகட் டாயமாய்
3. அ:— கட்டாயமுடியாதென்று கட்டுரைப்பதன் னீதமே
கண்:— எட்டாதகொம்புதேனுக்கேனிந்தவாதமே
4. அ:— வாதுயில்லைவாருமே வந்தே னுமதுபாரமே
கண்:— தீதுவந்துநேருமே சேராரெம்மனோருமே

5. அ :— தீதுவந்துநேருமென்று செப்புவதன்னியாயமே
மாதுசுபத்திரையால் மாயுமென் காயமே

வசனம்

கண்ணு, தங்கள் தங்கையை யான்மணக்க சகாயம் செய்யா விடில் நிச்சயமாய் எனதாவியை யிழந்துவிடுவேன் உனக்கு சம்மத மானல் அப்படியே செய்யாலாம்.

கண்ணன் தரு

(துடிக்குமயிலில் நடிக்கும் புண்ணியனே-எ-வ-மெ)

1. எனக்கு முனக்குக்கொடுக்க விருப்பந்தான்
என்னசெய்யலாம்
எனது தமையன் துரியனுக்கிசைந்தான்
எப்படி யதனைத்
தப்படிசெய்துனக்
கொப்படிப்பதுசொல
இப்படிதன்னிலே (என)

2. மனக்கவலைப்பட்டிருப்பதினலே
மாளர்தென்னலே
வந்தவழியைப்பாரினிமேலே
வரித்துவிதுரர்க்
குரைத்தமொழியை
மறுத்துநடத்தப்
பொருத்தமாகுமா (என)

வசனம்

மைத்துன, என்னெருவனுக்குமாத்திரம் சுபத்திரையை உனக் கேகொடுக்க உள்ளுக்குள் உண்மையான எண்ணந்தான், என்றாலும் என்முன்னவன் பலராமன் முதல் யதுகுலத்தோர் அனைவருமிசை யார்களே என்னசெய்யலாம்.

அர்ச்சுனன் விருத்தம்

முதலைவாய்தன்னிற்சிக்கி
முறையிட்டவேழந்தன்னை
விதனத்தை தீர்த்தகண்ணு விஜயனை கார்க்கோணுதே
சிதறிட செய்யாவாறு சீக்கிரம் கல்யாணத்தை
பதிதனில் முடித்துத்தீரும் பரந்தாமாகபடம் வேண்டாம்

கிருஷ்ணன் விருத்தம்

அஞ்சாதேநீயாதுக்கும் அர்ச்சுனநின் மனம்போல்
வஞ்சியைஎவ்விதத்தும் மணமதுசெய்தேதீர்வேன்
சஞ்சலப்பட்டிடாதே சந்யாசிபோலிருப்பாய்
பஞ்சவர்தம்மிற்றேர்ந்த பற்குனசென்றுவாரேன்

அருச்சுனன் வசனம்

முதலைவாயிலகப்பட்டு முறையிட்ட வேழத்தை முன்வந்துக்காத்த முகில்வண்ணா, காமமென்னும் கனல்வாயிலகப்பட்டு கருத்தழிந்து கலங்காநிற்கும் கடையேனை இச்சமயம் எவ்விதமாகிலும் காத்தளிப்பது உன்கடமை கண்ணா.

கண்ணன் தரு

(இ-ம்-கமஸ் தா-ம்-உரூபகம்)

பல்லவி

மைத்துனவுனதுமனதுக்கலங்காதே—இங்கு
வந்ததேமெத்தவிசேஷம்
மகிழ்ந்தேனெனக்குஞ்சந்தோஷம்

அநுபல்லவி

மெய்த்தவவேடமாய் மேவினதேநலம்
விருப்பப்படியினிதிருமணம்
சிறப்புடன்புரிகுவேனிங்கணம் (மைத்)

சரணங்கள்

1. உன்னையருச்சுனனென்ற
உளவினையறிந்தாலென்றன்
முன்னவன்முதல் யதுகுலத்தோர்
முனிகுவரிதர்க்கவரிசையார் (மைத்)

2. ஆதலாலிந்தக்கோலமாய்
அமர்ந்திவணிருப்பாய்சீலமாய்
பூதலத்தோருனைப்புகழ்ந்திட
புரிகுழல்தனைமணம்புரிந்திட (மைத்)

3. காலையில்வருகிறேன்போய்
காக்ஷியோடிவ்விதமாண்பாய்

ஆலடிதனிலிருபரிவாய்
அடுத்தவர்க்காசிர்புரிவாய் (மைத்)

வசனம்.

வெற்றியில் மிகுந்த வில்விஜயா நீயாதொன்றுக்கும் ஐயப்பட வேண்டாம் நின்சம்மதப்படியே முடித்து வைக்கின்றேன், இவ்வேடத்தோடு இங்ஙனமிருந்து வந்துவணங்குபவர்க்கு வாழிமொழிந்துவருருவாய் காலையில் யானும் வருகின்றேன்மைத்துனா.

அருச்சுனன் வசனம்

கண்ணா, சீக்கிரம் வந்து சேவைதந்து திருமணம் புரிவீர்

கண்ணன் பலராமன் சல்வாதம்.

(பார்ஸ்மெட்டு.)

கண்ணன்

1. அண்ணாயேன்சும்மாயிருக்கின்றீர்விண்ணோர்
ஆயிரங்கண்ணனையடுத்துசெய்யுந்திருநாள்
மண்ணோர்புகழ்வந்தஇந்தினமே—நாம்
மகிழ்ந்துரைவதமலையைசார்வனமே—சென்று
மங்களமாகவேபொங்கலிடவுமக்கில்லையோகவனமே ()

பலராமன்

சரிதானெனக்கிது கவனமேயில்லை
தம்பிநீசொன்னது சந்தோஷமேயிச்சொல்லை
வரிசையாகவே வருடந்தோறுமேநாம்-நல்ல
வண்மையுடனேநடத்தும்வழக்கமாம்-அந்த
வாசவனுக்கிடும் பூசையையிந்தினமாசறவழங்கலாம் ()

கண்ணன்

2. வழங்கியநம்செல்வ மாநகரத்தில்
வாழுஞ்சனங்களெல்லாம் வரஇத்தினத்தில்
பழங்கனில்வியங்கள்முழங்கிடநேர்-நமது
பரவியமரபினரொடு புறப்படுவீர்-நல்ல [வேசிர்
பண்புடனேபொங்கல்பெண்களிடும்படி கொண்டுபடா ()

பலராமன்

சீர்பெறும்யாதவகுலத்துள்ளோரும்
சேர்ந்துசூழ்ந்துவரபோஜர்களெல்லொரும்
நேர்பெறும்படி வருகின்றேன்விரைவாய்-நல்ல
நீதவினோதசங்கீத முடன்பரிவாய்-தம்பி
நீணிலமெங்கும்புகழ்வேணுகோபாலா நீயும்புறப்படுவாய்

கண்ணன்

3. புறப்பட்டுவருகின்றேனண்ணாநான் பின்னே
பூசைக்குவேண்டும்பொருள்களைக் கொண்டுமுன்னே
நெறிப்பட்டுநீரப்பொருப்பை சேர்ந்திருப்பீர்-பொங்கல்
நீட்சியாயிடும்படி நேரிழையர்க்குரைப்பீர்- ஒரு
நிமிடத்தில்வந்துசேருகிறேன்காலம் நீடிக்கால்நடக்காப்பீர் ()

பலராமன்

அப்படியே முன்நடக்கின்றேனன்பாய்
ஆலஸ்யமில்லாமல் நீவந்துசேர்ந்திடுவாய்
மெய்ப்படியவ்விழாவினிநடக்கும்-அந்த
விந்தையைகாணவிருப்பமுமிருக்கும்-தங்கையை
மேவியழைத்துவருவாய்தம்பி மேகவண்ணாஎதற்கும் ()

வசனம்-

தம்பி கண்ணா நம் நகரவாசிகளோடு நான் முன்னதாக செல்லுகின்றேன் நீ நமது தங்கைமுதல் சகலமாதர்களையும் அழைத்துக் கொண்டு சீக்கிரம் வந்து திருவிழாவை நடத்துவாய்.

கண்ணன் வசனம்

அண்ணா, தங்கள் அநுமதியின்படி அவ்வாறே அழைத்துக் கொண்டு வருகின்றேன் அனைவரும் செல்லுங்கள்.

பலராமன் வசனம்

நகரவாசிகளே, நம்மினத்தோர் வருஷப்பிரதிவருஷமும் வரிசைப்படி வழக்கம்போல் நடத்திவரும் தேவேந்திரன் திருவிழா தினம் இத்தினமாதலால் அதற்குவேண்டிய திரவியங்களை சேகரித்துக்கொண்டு புறப்படுங்கள்.

தரு

(இ-ம். தர்ப்பார் தா-ம். ஆதி)

பல்லவி

போகலாம்-அந்த
புரந்தரனுக்குரிய
பெருந்திருநாட்புரிய

அநுபல்லவி

நாகரீகநம் நகப்பரிசனங்கள்
வேகமாகவிளங்க புறப்படுங்கள் (போ)

சரணங்கள்.

1. இத்தினமாமென்பது என்தம்பியால்வந்தது
இனிதாமதஞ் செய்வது ஏற்காதுங்களுக்கிது
எத்திசையுங்கொண்டான் யதுகுலத்தவர்கூட
எங்கிலத்தவருகையெடுத்துப்புகழ்ந்துபாட ()

2. பாகுகன்னல்கற்கண்டு பால்தயிர்வெண்ணெய் பண்டு
பரிமளப்புட்பச்செண்டு பழவர்க்கங்களுங்கொண்டு
வாகுளதூபதீபம் வாசக்ககற்பூரந்தேங்காய்
வாசவனுக்களித்துவருவோம் வருவீர்பாங்காய் ()

3. மங்களவலங்க்ருத மாக்ஷிமையாய்ரைவத
மலையைசேர்ந்துப்பல்விதவகைகள் செய்வோமிங்கித
மங்கையர்களெல்லாங்கூடி பொங்கலிடவரும்படி
வரிசை வரிசையாகவரசெய்வீரரைநொடி (போ)

வசனம்

முல்லை நிலவாசிகளே தங்கள் மனைவி மக்களோடு ஆடையாபரண அலங்க்ருதர்களாய் அதிசீக்கிரம் புறப்படுங்கள்.

(கோபாலர்கள் வசனம்.)

சித்தம் பிரபு

பலராமன்

# அருச்சுன சன்னியாசியைக் காணுதல்

பலராமன் விருத்தம்

யாரது பாரீரங்கு யாதவகூட்டத்தோரே
சீரால விருக்ஷத்தின்கீழ் சிறப்புடனோர் சந்யாசி
பாரும் வீற்றிருக்கின்றார் பார் யாவருமங்குசென்று
தீரவே அவரைக்கண்டு தெரிசித்து செல்வோம் வாரீர்

வசனம்.

ஆ-ஆ-இதுவென்ன அதிசயம் யாதவர்களே அவ்வால விருக்ஷத்தின் கீழே ஆரோவோர் திரிதண்டசன்னியாசி எழுந்தருளியிருக்கின்றார தெரிசித்து செல்வோம் வாருங்கள்.

பலராமன் முதல்யாவரும் அருக்சுனசன்னியாசியை,

தரிசிக்குந்தரு

(மானே பொன்மயமானே எ-வ-மெ.

பல்லவி.

போற்றி பொன்னடிப்போற்றிப்போற்றி
புண்ணிய துறவறம்பூண்ட
கண்ணிய மாதவத்தோனே

அநுபல்லவி

நேற்றியாந்திருநீற்றுக்கோலம்
நேர்த்தியே யெதிர்பார்த்தேனிக்காலம்
சாற்றுமுப்புரிநூலுமுக்கோலுந்
தங்குமிவ்விங்கிதங்காண
தவமென்னசெய்தோமாண (போ)

சரணங்கள்

1. செங்கதிர்மேற்கடலிலார்ந்து
திரும்பியதோவென் றுரைக்கத்தோர்ந்து
செங்கற்றூசுமெய்த்திகழசார்ந்து
சிவபெருமான்றனைப்போலே
சேவைதந்தீர்புவி மேலே (போ)

2. மங்குல்வாகனன் றனக்குவரையில்
மருவியவிழாவைசெய்ய முறையில்
பொங்கலிடநான் போகின்றநெறியில்
புண்ணிய தரிசனங்கண்டேன்
பொங்குபேரானந்தங்கொண்டேன் (போ)

வசனம்

சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கின்றோம் ஸ்வாமி.

அர்ச்சுனன் விருத்தம்.

வாழிநீவாழிவாழி வாழிநீடூழியாக
ஆழிசூழுலகில்ஆளும் அரசர்கள்வணங்கப்பெற்று
மேழியார்கலப்பையேந்தி மேதினிசுமையைத்தீர்க்கும்
பாழிமாமலைபுயத்தோய் பண்புடன்வாழிவாழி

வசனம்.

வாழி வாழி நீடூழியாக வாழக்கடவது அப்பா நீயார் இருப்ப தெந்தவூர் எம்மிடம் வந்தகாரணம்யாது விளம்புவாய்.

பலராமன் விருத்தம்

நாங்களோதுவாரகைதான் நான் பலராமமன்னன்
தாங்களிங்கிருத்தற்கண்டு தரிசிக்கவந்தோம் சுவாமி
ஏங்கிடாதிருக்க அந்த இந்திரன் பூஜைசெய்ய
பூங்காவைநாடிப்போரோம் புரவலாவந்தித்தோமே

பலராமன் வசனம்

ஸ்வாமி, அடியேங்கள் வசிக்கும் நகரம் துவாரகாபுரி ஏழை யேனபிதானம் பலராமனென்றழைப்பார்கள் இத்தினம் இந்திரனுக்கு செய்யுந்திருவிழாதினமானதால் இரைவதகசைலத்திற்கு செல்லு கின்றோமையா.

அர்ச்சுனன் விருத்தம்

என்னகாரணமதாக இங்ஙனம் நாடிவந்தீர்
நன்மையுண்டாக என்றும் நலமுடன் வாழி வாழி
துன்பமும் ஏற்படாமல் சுகமது சீக்கிரமாகும்
மன்னவா என்ணேநாடி வந்ததை உரைசெய்வாயே.

அருச்சுனன் வசனம்

சரி, நம்மிடமேன்வந்தீர்கள்.

பலராமன் வசனம்,

தங்கள் திருக்கோலத்தைக்கண்டு தரிசிக்கவந்தோம் ஸ்வாமி.

அருச்சுனன் வசனம்

சந்தோஷம், சென்று வருவீர்கள்,

பொதுவசனம்

சபையோர்களே கண்ணபிரானேடு சுபத்திரைமுதலானவர்கள் பின்வருவதை யறிவீர்கள்.

கண்ணன் விருத்தம்

தங்கையே சுபத்ராதேவி தமையன் யாதவர்களோடு
பொங்குடன் பூஜைசெய்யப் போயினர் முன்னதாக
அங்கனம் வருகின்ருயா அன்புடனதனைச்சொல்லு
மங்களமாக வாராய் மகிழ்வது பெருகுவாயே

கண்ணன் வசனம்

தங்காய் சுபத்ரா நம் தமையன் முதலான யதுகுலத்தவரெல்லோரும் ஏந்திழைமாரோடு இந்திரபூசை வியற்றுதற்கு செல்லுகின்ருர்கள் நீயும் வருகின்ருயா

சுபத்திரை விருத்தம்

நல்லது அண்ணு உன்பின் நானுமே வாரேன் வாரேன்
இல்லறக்காக்ஷிகண்டு இன்புறவேனுன் காணும்
கல்யாணம் தான் கைகூட ககனனைப்ரார்த்தனைசெய்ய
எல்லோரும் புகழநானும் இன்றுமே மகிழவாரேன

வசனம்

அண்ணு இந்திரராசனுக்கு செய்யும் திருவிழாவைக்கண்டுகளிப்பதுமன்றி எனக்கு கூடியசீக்கிரம் காண்டீபரைக்கல்லியாணம் செய்துக்கொள்ளவும் ப்ரார்த்திக்கின்றேன் அதுபற்றியேதங்களுடன் பின்பாக இதோ வருகிறேன் யாதொரு தடையின்றி தாங்கள் அழைத்துச் செல்லும்.

சுபத்திரை தரு

(போவோம்வாராயேசேடி எ-வ-மெ)

பல்லவி

ஆனுலென்னையும்முடன் அழைத்துசெல்லுவீரண்ணு.

அநுபல்லவி

வானுளுமிந்திரனுக்கு வந்ததிருவிழாவுக்கு
மானுருடனடுத்து வந்தேன்வந்தனமுமக்கு (ஆ)

சரணங்கள்

1. யதுகுலத்தவர்பயிலும் இரைவதகசயிலம்
புதுமையுடனேபார்க்கப் புகுவோமில்லைவெயிலும் (ஆ)

2 எங்கும்பரிபூரனனே எவைக்குமுதற்காரணனே
தங்கவேலனகத்திற் றங்கும்ஸ்ரீநாரணனே

வசனம்

அண்ணு, ஓராண்டுக்கோர்நாள் அருமையாகவரும் இந்த திருவிழாவின்காக்ஷியை கண்டுகளிக்க எனக்கும் விருப்பமே ஆனதால்சேடிகளுடனே கூடியானும் வருகின்றேன்.

அருச்சுனன் சுபத்திரை வருவதை கண்டுகாதல்கூர்.

விருத்தம்

மதிபோன்ற திருமுகமும் மைவிழியும் வாணகையும்
மையலுக்கோர்
பொதிபோன்று வணங்காமற் பூரித்த விருதனமும்
பொறைபொறுமல்
அதிபார மெனவாடி யலங்கிடையு மணிநடையும்
அழகாய்த்தோன்ற
எதிராக வருகின்ற வேந்திழையா ளிவளின்ப
மேற்பதென்றோ

வசனம்

ஆ-ஆ-என்ன அற்புதம் பூரண சந்திரனைப்போன்ற அழகிய வதனமும். மைதீட்டிய நெடிய கண்களும் ஒளிபொருந்திய முல்லையரும்புபோன்ற தந்தபந்தங்களும் பருத்த இரண்டுபயோதரங்களும் அந்த பாரத்தைத்தாங்காது வாடியசையும் சிற்றிடையும் அன்னநடையும். வெளிப்பட அதோவருகின்ற மணிவண்ணன் தங்கையாகிய மாதுசிரோன்மணியை மருவிசுகிக்கும் நாளெந்நாளோ! யான் எப்படி சகிப்பேன்.

பொதுவசனம்

அன்பர்காள் இங்கு அருச்சுனன் இவ்வாறிருக்க, அங்குக ண்ணன் கனிஷ்டை சுபத்திரையுடன் அண்ணன் பலபத்திரனை யடைந்து திருவிழாவை முடித்து திரும்பி வருவதையறிவீர்கள்.

கண்ணன் விருத்தம்

இந்திரன் திருவிழாவை இனிதுடனத்திவிட்டோம்
சந்தோஷமாகச் செல்வோம் சம்பன்னசீக்ரமாக
அந்தமாய் தானம் செய்வோம் அனைவரும் நாமுங்கூடி
விந்தையாய்நாமிருப்போம் விரைவுடன் வருகுவீரே

கண்ணன் வசனம்

அண்ணா, நாம் அமரேசன் விழாவை அன்புடநடத்திவிட்டோம் இனியனைவரும் நமது நகரடைவோம் புறப்படுங்கள்.

பலராமன் தரு.

(தர்மபுத்திரமகாராஜனே எ-வ-மெ)

பல்லவி

தம்பிகோபாலா யிங்குவருவாய்- இந்த
சாதுவைசேவித்தருளைப்பெறுவாய்

அநுபல்லவி

அம்புவியினும் செய்த அருந்தவப்பயன் வந்து
ஆலமரத்தடியிலமர்ந்திருக்கின்றார் முந்து

சரணங்கள்

1. கயிலைவாழீசனென்றே சொல்லலாம்-நெற்றிக்
கண்ணிருந்தாலவ்விதமேகொள்ளலாம்
மயில்களாடும்ரைவத மலையின் சார்பினிலுற்ற
மாக்ஷியென்னக்காக்ஷிக்கமலாக்ஷியை மருவப்பெற்ற ()

2. மறையினிலுள்ள முறைப்பேசி-வந்த
மாதவதிரிதண்டசன்னியாசி
குறைவராவேயிவரைக்கொண்டு நமதகஞ்சென்று
கோதறதொண்டுசெய்துக்கொண்டு வருவதேநன்று ()

பலராமன் விருத்தம்

என்னிடதம்பிகண்ணு இதோபார் மரத்தின் கீழே
சன்யாசிதன்னைக்கண்டு தரிசித்துவாராய்சென்று
கன்னிகை சுபத்திரைக்கும் காட்டிஆசீர்கள்பெற்று
அன்புடன்சீக்கிரம்வாராய் அனைவரும் நகரம் போவோம்

வசனம்

தம்பி தாமரைக் கண்ணு இந்ததிரிதண்டசன்னியாசியை நீ தரிசித்திருக்கின்றாயா நன்குகவனித்துப்பார்!

கண்ணன் வசனம்

அண்ணு யான் பார்க்கவேயில்லை.

பலராமன் வசனம்

ஆனால் இப்போதாவது இவர் பாத பதுமங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து சேவித்துக்கொள்வாய்.

கண்ணன் தரு.

(இ-ம். மோகனம். தா-ம் ஆதி.)

பல்லவி

அன்னியாய மீதென்ன வார்த்தை
சொன்னீரெந்தன் முன்னே அண்ணு

அநுபல்லவி

சன்னியாசிகளை நம்பத்தகுமா
சரிசரியிதுவுமதிடசம்மதமா

சரணங்கள்.

1. அரஹாசிவவென வடித்தெதிர்ப்பணிவார்
அடிமடியிற்கையைப் போடவேதுணிவார்
அரவணிபரனவனுரு வெனநடிப்பார்
அகப்பட்டதைக்கொண் டோட்டம்பிடிப்பார் (அண்)

2. அஞ்சனவிழிமடமாதர்களிழைக்கும்
அற்புதகற்பெனும் பொற்பினையழிக்கும்
அஞ்சிடுநஞ்செனும் வஞ்சனையெழுக்கும்
அவனியிலிதுபுளு கான்டிகள்வழக்கம் (அண்

கிருஷ்ணன் விருத்தம்

சம்பன்ன இவனசாது தாங்களுமெண்ணவேண்டாம்
நம்பவேமாட்டேனண்ண நயவஞ்சனிவனேகாண்பீர்
வெம்பியே யவனும் போலி வேடந்தானீது உண்மை
தம்பிரான்போல்நடிக்கும் சன்யாசியாகும் அண்ண

வசனம்

அண்ண, தாங்ளென்னமோ சாதுவென யோசிக்கின்றீர்,எனக்கு சந்தேகமாகவே யிருக்கிறது, ஏனென்றால் திருவிழாகாலத்தில், இது போல் திருட்டுப் புளுகாண்டிகள் போலிவேடம் பூண்டு, ஜனங்களைத் தட்டிப்பறித்து சந்து வழிபார்ப்பது வழக்கம் நம்பிக்கெடாதீரண்ண.

பலராமன் வசனம்

அனுஜ அப்படியிவர்மீது அருவருப்புப்படவேண்டாம்.

கண்ணன் வசனம்

ஆயினும் சோதித்து தெளிவோம்.

கண்ணன் தரு.

(சீலசுகுணவுதாரனே எ-வ-மெ).

**கண்ணிகள்.**

1 ஆரடாபுளுகாண்டி திருட்டுசன்னியாசிவேடம்கொண்டு-நீ
யாரைக்கெடுக்கவந்தாலமரத்தடியமர்ந்தனைக்கண்டு (ஆ)

2. பாரடாவுனைபோலேநான்பலபேரைப்பார்த்திப்பேன்-எங்கள்
பட்டினத்தினிற்றலையைக்காட்டினல்வெட்டியேபுதைப்பேன்

3. பண்புடனேயிங்குப்பொங்கலிடவரும்பெண்களைக்கண்டு-வழி
பரிக்கசமயம்பார்த்திருக்கும்பெருநிகண்ளப்பயலேநீவிண்டு

4. உண்மையிதுவெனவுள்ளபடிசொல்லியோடிப்பிழைதிடுவாய்அதை
யுரையாவிடிலினிசிறையிலடைத்துனையொறுப்பேனுணர்ந்திடுவாய்

வசனம்

ஆரடா அடா ஆண்டிப்பயலே இங்கு யாரை யேமாத்துவதற்கு இந்தப்போலி வேடம்பூண்டு வந்தாய், உண்மையயுரைத்து உயிர் பிழைத்தோடுவாய், இல்லாவிடில்சிறையிலடைத்து கிதைப்பேன்.

அருச்சுனன் தரு

(ஏனோ என்மேல்பழிசுமத்துரீர் என்ற வர்ணமெட்டு)

பல்லவி

ஏனோ என்மேல் இத்தனைக்கோபம்
ஏதுவி லாதுநீர்
எனைசினந் திகழ்வது இதுவென்ன விதிவசம் (ஏ)

அநுபல்லவி

நானேசகலமுந்துறந்தசன்னியாசி
நடுநிலைநாடும் பரதேசி
ஞாயமோயிப்படி
நவிலுவதுமக்கிது நலமலவளமுள
புவியினிலெனைப்புளு காண்டியென்றுளங்கொள (ஏ)

சரணம்

1. துறவிக்குவேந்தன் றுரும்பெனும்பழமொழி
சொல்வதைக்கேட்டுமில்லையா
தூஷிக்கலாகுமா
துரிதமாய்க்கோபம் வருமினிசாபந்
தொடருமுனப்புறஞ் செல்லையா (ஏ)

அர்ச்சுனசன்யாசி விருத்தம்

அஞ்சாநெஞ்சம்படைத்து
ஆங்காரமிகவேகொண்டு
கொஞ்சியேவந்துகேட்கும்
கொற்றவாநானுமுன்னை
மிஞ்சியேசாபமீவேன்
மீறிதூஷிக்கலானுய்
சஞ்சலமாவதற்குள்
தக்ஷணமப்புறம்போ

வசனம்

ஆரப்பா நீ, அஞ்சா நெஞ்சம்படைத்தவனுக இருக்கிறுய் அது வரையில் போதும் அப்புறம் செல் மீறிப்பேசினுல்சபிப்பேன்.

பலராமன் தரு
(சங்கார கெங்காதரா என்ற வர்ணமெட்டு)

பல்லவி

தம்பிநீதென்ன ஞாயம்—இந்த
சாதுவைவிப்படி சீறி
யோதுவதழகல்லமீறி

அநுபல்லவி

நப்பினவர்கட்கன்றேவநுகூலம்
அம்புதன்னிலருந்தவக்கோலம்

அதிசயங்கிடைக்கின்றதருமை
யந்தணர்பெருமையேபெருமை
கதிர்மணிவண்ணபொறுமைக்
கடலினும்பெரியது வுரிமைத் (தம்)

சரணங்கள்

1. முக்கோலுங்கமண்டலமும்—நல்ல
முப்புரிநூலுடன் சிறந்து
இப்புவியாசையை மறந்து
இக்கோலங்கொண்டிங் கிருக்கின்றவாறு
முற்காலம்நாம்செய்த முதுதவப்பேறு
முனிவுகொண்டிதை மறுக்காதே
முனிபுங்கவரை வெறுக்காதே
இனியனுயிரு தருக்காதே
ஏளனம்புரிந் தொறுக்காதே (தம்)

பலராமன் விருத்தம்

அறிவின்மையாலேபேச லாகுமோ கீழ்மையாக
திறமிலாரிவ ராவரோ திரிதண்டம் பிடித்திருக்கும்
நெறியதையறிகுவாரோ நீயதையோசியாமமல்
குறிப்பறியாமல்திட்டி கோபிக்கலாமோ கண்ணா

வசனம்

தம்பி, போலிவேடம்பூண்ட புளுகாண்டியாயிருந்தால் இந்த மழையிலுங் காற்றிலும் வந்து மனந்துணிந்து மரங்கள் சூழ்ந்த இந்தமலையின் சாரலில் தைரியமாய் சகித்துக்கொண்டிருப்பாரோ, அல்லது திரிதண்டம் பிடிக்குந்திறந்தான் தெரிவாரோ குறிப்பறியாமல் கோபித்து வைவது நம்போன்றவருக்கு அழகல்லகண்ணா

கண்ணன் வசனம்

ஆனால், அண்ணா, தாங்கள் எவ்விதம் இவர்விஷயத்தில் யோசித்திருக்கின்றீர்.

பலராமன் வசனம்

தம்பி, இவரை நாம் நம்முடன் நம்நகரத்திற்கழைத்துக்கொண்டுபோய் உபசரித்து வருவோமென்று உத்தேசிக்கிறேன்.

கண்ணன் விருத்தம்

என்னமோ உங்களிஷ்டம் எனக்கு சந்தேகந்தோன்றி
சொன்னேனு னுமக்குதானும் சோகமே கொள்வேண்டாம்
அன்னவர் திருப்பணிக்கு அன்புடன்செய்யவேதான்
கன்னிகையொன்று வேண்டும் கழறினேன் யாதுசெய்வீர்

கண்ணன் வசனம்

ஆமாம். இவரையழைத்துக்கொண்டுபோனல் இவருச்சிசைந்த படி திருப்பணிகள் செய்ய கன்னிகையான வோர் பெண் வேண்டுமே அதற்கென்ன செய்வீரண்ணு

பலராமன் விருத்தம்

அன்பான எந்தன்தம்பி அதற்காக யோசியாதே
இன்பமாய் நமதுதங்கை இல்லையோ அதுவேபோதும்
ஒன்றுக்கும் சிந்தியாதே ஒருவரைத்தேடவேண்டாம்
சொன்னதோர் மார்க்கம் செய்வாய் சுந்தரா நீமகிழ்ந்தே

வசனம்

ஏன் நம், தங்கை சுபத்திரையில்லையா அதைவிடவேருெரு வரைத்தேடவேண்டுமா! இவரிடம் கபடம்யாது மிராது சந்தேகப் படாதே

கண்ணன் தரு

(ஆதியினும் பறைனல்ல எ-வ-மெ)

**கண்ணிகள்**

1. என்னுலுமக்கேனிக்கஷ்டம்
இனிமேலண்ணு வும்மிஷ்டம்
பின்னுமலதற்குமென்மீது
பிழை சொல்லவேதகாது (என்)

2, சன்னியாசியாமிவர்க்கு
தரும்பணிப்புரிவதர்க்கு
கன்னிநமது தங்கையே
கனிவாளிலைசங்கையே (என்)

3. சாஷ்டாங்கநமஸ்காரம்
சாமிநீரெழுந்துவாரும்
தாஷ்டீகமாக வெங்கள்
தங்கையிடம் வந்துசேரும் (என்)

4. சிறியவர் செய்தப்பொல்லா
சிறுபிழைகளை யெல்லாம்
பெரியவரதையுடனே
பெரிதும் பொறுத்தல்கடனே (என்)

கண்ணன் விருத்தம்

சன்யாசியாகவந்த தம்யரேநிலைமைதன்னை
இன்னதென்றறிந்திடாம லேதேதோ சொல்லிவிட்டேன்
அன்புடன் நீர்பொறுத்து ஆட்கொளும் கோபமின்றி
என்னையே காக்கவேணும் ஏதும் சந்தேகம் வேண்டாம்

வசனம்.

ஸ்வாமி, தாங்கள் நிலைமையை யின்னதென்றறியாமல்ஏதேதோ பிதற்றிவிட்டேன் அதை யெவையும் இதயத்திற் கொள்ளாமல் எங்கள் இல்லத்துக்கெழுந் தருளவேண்டும், அண்ணா, ஸ்வாமிகள் கோபத்தை சாந்தப்படுத்தி நம்முடன் வரும்படி செய்வீர்.

பலராமன் விருத்தம்

துறவியே போற்றிபோற்றி துணைவரே எந்தன்தம்பி
அறியாத தன்மையாலே அவனேதேதோ நினைத்தான்
சிறியவனுனதாலே செய்திட்ட யிப்பிழையை
பொறுத்துமே காக்கவேண்டும் புண்யனே கோபியாதிர்

பலராமன் வசனம்

தவசிரேஷ்டரே இவ்வுலகில் இதுவரை இறந்தவர்கள் இத்தனைப் பேரென கணக்கெடுத்தல் எங்ஙனம் முடியாததோ, அதுபோல துறந்தவர் பெருமையை சொல்ல முடியாதென சாஸ்திரங்கள் கூறுகின்றனவே அவ்வளவு பெருமையுடைய தங்களை என்தம்பி சண்ணன் சிறியவனுதலால் ஏதோபிதற்றி விட்டான் அதற்காக சினங்கொள்ள வேண்டாம்கடலே கொதித்தால் எதைக்கொண்டு ஆற்றுவது? சாந்த மூர்த்திகளாய்தாங்கள் அதை சகித்து தயை செய்து எமதில்லத்திற்கெழுந்தருளி ஆசீர்வதிக்க பெரிதும் பிரார்த்திக்கின்லேன்

அருச்சுனன் தரு
(என்னநான் செய்குவேன் எ-வ-மெ)

பல்லவி

அப்பப்பா இவனென்ன அந்நீதக்காரனே
ஐயோ நான் வரமாட்டேன்

அநுபல்லவி

தப்பாததிரிதண்டசன்னியாசியான என்னை
சற்றுங்கவனியாமல் தடுக்கின்றனேநின்னை (அப்)

சரணங்கள்

1. இன்னமுன்னகருக்கங்கிசைந்துவத்தாலும் பின்னால்
என்னென்னசெய்வானே முன்னால்
முன்னவன் நீநல்லமுயர்ச்சியிற்போனாலும்
இன்னதென்றுணராநின்சின்னவனானாலும் (அப்)

2 கள்ளவேடமீதென்று கண்டவன்போல்கனன்று
கட்டுரைக்கின்றனேமுன் நின்று
உள்ளப்படியுனது வுள்ளத்திலில்லைசூது
எள்ளளவுமிவனையெப்போதும் நம்பொணாது (அப்)

அருச்சுனசந்யாசி விருத்தம்

வருவோமென்றாலுன் தம்பி வழிகொடான் பழிப்பான்காணும்
துறவோர்தமை தூஷிக்கும் துஷ்டனுக்கஞ்சுகின்றேன்
திறமையு மில்லானென்று திட்டினன் யோசியாமல்
மறக்கவுந்தோணவில்லை மாபதிவரவே மாட்டேன்

வசனம்

ஐயா, நின்விஷயத்தில் எனக்கொன்றும் ஐயமில்லை. வருவோமென்றால் உமது தம்பியோ துறவிதனை தூஷிக்குந் துஷ்டனாக இருக்கின்றான், ஆனதால் எமக்கிஷ்டமில்லை ஏன் கஷ்டப்படுத்துகின்றீர்.

பலராமன் விருத்தம்

அப்படியொன்றும் தீங்கு அங்குமே நேரிடாது
இப்படியங்கு செய்யான் என்பின்னே எழுந்துவாரீர்
கைப்பிடித்தேயழைத்து காருண்யா செல்வேனுனே
ஒப்பியே வாரும் ஐயா ஒன்றும்யோசிக்கவேண்டாம்

பலராமன் வசனம

அப்படியொன்றும் நடவாது எழுந்தருள்வீர் ஸ்வாமி

அருச்சுனன் தரு

(தாஜராஜ தாஜராஜ என்ற வர்ணமெட்டு)

மாசிலாநின் னுடங்கனம் வருகின்றேனையா
மாயனிவனாலே மயங்கியேயென்மனம் வாடுதேதய்யா
காசினிதனிலே காதலையொழித்துக் காலத்தைக் கழிக்கநான்
கனமுறுங் கடுந்தவங்களாகிய காவல்செழிக்கவான்
கதிபெறவெனக்கினி பணிவிடைப்புரியவோர் கன்னியை தருவீர்காண்
கலகன்சொற்கேளாதே காந்தமாய்வைத்தெனைக்
காத்தினிதிருப்பீர்காண்—இடர்
தீர்த்தினிதிருப்பீர்காண்—யாதோர் (மாசி)

அருச்சுனசந்யாசி விருத்தம்

வருந்திநீரழைப்பதாலே வருகிறேன்கிலேசம்வேண்டாம்
கருணையாய்ப் பணிகள்செய்ய கன்னிகையாளும்வேண்டும்
திருப்தியாய்க் கொடுப்பதாகில் தென்பாகயோகம் செய்வேன்
விரும்பிடேன் தம்பிதன்னை மித்ராசம்மதமுந்தானு

வசனம்.

ஐயா நீர் எம்மை அப்படி வருந்தியழைப்பதால் வருகிறோம்எமக்குத் தக்கபடி பணிவிடைசெய்யும் ஓர் கன்னிகையும் ஏகாந்தமான இடமும் இருக்கவேண்டும். அதுவுமன்றி நின்னிளையனாகும் இவன் நம்மிடமென்றும் நாடாதிருக்கவேண்டும் சம்மதமெப்படி சாற்றுவீர்

பலராமன் வசனம்.

சித்தப்படியே செய்கின்றேன், தேவரீர் எழுந்தருள்வீர்.

பொதுவசனம்

இங்ஙனம். பலதேவன் தனது கனிஷ்டனுன கண்ணன் கபடநாடக நடையையும் அருச்சுனன் கள்ளவேடத்தையும் அறியாது உண்மையாக உத்தம ஞானி யென்றுநம்பி தம்பியுடன் தனஞ்சய சன்னியாசியையும், ஒத்துமைப்படுத்தி அழைத்துக்கொண்டு துவாரகையடைந்து சுபத்திரையைக்கொண்டுதொண்டு செய்யவிடுஞ்சூழ்ச்சியை அறிவீர்கள் ஆன்றோர்களே.

பலராமன் விருத்தம்

கன்னிகாரத்னமே கேள் களிப்புடன் வந்த யிந்த
சன்யாசி உளப்படிக்கு தழைக்க ஊழியமேசெய்ய
உன்னையே தீர்மானித்து ஊக்கமாயிங்கழைத்து
கன்னிகாவந்திட்டேனே கண்டுமேதொண்டு செய்வாய்

பலராமன் வசனம்.

தங்கா சுபத்ரா, சிவபெருமானைப்போல் விளங்கும் இந்ததிரிதண்ட சன்னியாசியின் திருவுளப்படி திவ்வியப் பணிவிடைகள் செய்ய உன்னைத் தீர்மானித் திருக்கின்றோம் என்ன சொல்லுகின்றாய்.

சுபத்திரை விருத்தம்

தங்கள்சொற்படியே ஏவல் தையல் நான்செய்வேனண்ணு
பங்கமும் நேரிடாமல் பாதுநீர்காக்க வேண்டும்
இங்கனம் இவர்க்கிணங்கி இருப்பேனும் மிஷ்டம்போலே
மங்களமாகச் செல்வீர் மறந்திடேன் போற்றி போற்றி

சுபத்திரை வசனம்

சித்தம், காத்துக்கொண்டிருக்கின்றேனண்ணு.

கண்ணன் விருத்தம்

எனதிட தங்கையேகேள் இவரிஷ்டப்படியே நீயும்
தினந்தினமேவல் தன்னை திருப்தியாய் செய்வாயாகில்
மனம்போலசிக்கிரமாக மணமது ஆகும் தங்கா
கனமுடனீயுமிங்கு களிப்புடனிருந்திடாயே

கண்ணன் வசனம்

தங்கையே, இவரிஷ்டப்படி இரண்டுமாதம் வரையில் பணித்திடும்பணிகளை பண்புடன் பயின்று வருவாயாகில் இங்ஙனமே எண்ணிய வெண்ணம் எளிதிற் கைக்கூடும்.

சுபத்திரை வசனம்

அண்ணா, பெரியோர்கள் கட்டளைக்குப் பிழைவராது நடக்கப் பின்னவள் சித்தமாக இருக்கின்றேன்.

பலராமன், அருச்சுன சன்னியாசியைப் பார்த்து

சொல் வசனம்

ஸ்வாமி, தங்கள் யோகத்துக்கு சந்தடி இலாத இடம் எங்கள் தங்கையிருக்கும், கட்டுக்காவலுடைய இந்தக்கன்னிகாமாடமே மேலும் தேவரீருக்கு சிரத்தையோடு சிஷ்ருஷை செய்ய எங்கள் தங்கையே தகுந்தவள், ஆதலால் இங்ஙனமே எழுந்தருளி யிருப்பீர் யாங்கள் சென்று வருகின்றோம்.

அருச்சுனன் வசனம்

கல்யாண, சென்றுவீர்.

பலராமன் வசனம்

தம்பி, தாமரைக்கண்ணா, இனி நாம் தந்தம் அந்தப்புரமடைவோமா,

கண்ணன் வசனம்

அண்ணா, அவ்வாறே அடைவோம்-

சுபத்திரை தரு

(வேலவா வடி வேலவா என்ற வர்ணமெட்டு)

பல்லவி

சேடிகாளடி சேடிகாள்மனந் தேரிரிங்கிவரை

அநுபல்லவி

நாடியேபரிந்து நற்பணிப்புரிந்து
நலம்பெறுவோம் விரைந்து
நாமெல்லோருமே நண்ணியே மண்ணினில்நிதம் ()

சரணங்கள்.

1. ஆவலைவிடுத்து அருந்தவமடுத்து
அறுவாதமும்புரி
ஆசுரலாடி அண்ணலருளியபடி (சேடி)

2, சேவடிப்பணிந்து சிரமிசையணிந்து
தினந்துதித்தொழுகுவோம்
தீதிலாதருள் செய்வதைநாம்சிந்தைகொண்டு ()

வசனம்

சகிகாள், நாம் செய்த நற்றவப்பேற்ருல், இங்ஙனம் எழுந்தருளிய எதீஸ்வாரை நீங்காது நீதியோடு எனது தமையன்மார்கள் நேமித்தபடி ஸ்வாமிகட்கு சாஷ்டாங்க நமஸ்காரம் சமர்ப்பித்து பணிக்கும்பணிகளை பயபக்தியோடு புரிவோம் வாருங்கள்

சகிகள் வசனம்

அம்மணி, அவ்விதமே புரிவோம்.

பொது வசவம்

இங்ஙனம் சுபத்திரையானவள் கன்னிகாமாடத்தில் வந்தமர்ந்த அருச்சுன சன்னியாசியை அன்புடன் தொழுது பணிவிடை புரிந்து பயிலும் நாளில் ஒருநாள் அவன் கட்டளைப்படிக் கைகால்களைப் பிடிக்குங்கால் அரசர்க்குரிய சிலவங்க வடையாளங்களையவனிற் கண்டு ஐயங்கொண்டு விசாரித்து விஜயனென்றறிந்து விவாகங்கொள்ளும் விந்தையை யறிவீர்கள்.

சுபத்திரை வசனம்

ஸ்வாமி, அடியாள் சாஷ்டாங்க நமஸ்காரம் சமர்ப்பிக்கின்றேன்.

அருச்சுனன் வசனம்

கல்யாண், மங்களமுண்டாகட்டும்

சுபத்திரை வசனம்

ஸ்வாமிகள் பணித்திடுங் கட்டளை யெதுவோ எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்

அருச்சுனன் வசனம்

கன்னி சுபத்ரா, எனக்கென்னமோ மெத்தவும் கை கால் அயர்ச்சியாக இருக்கின்றது ஆதலால் சந்தேகப்படாமல் சற்றே பிடிப்பாய்.

சுபத்திசை தரு

(நான் தருவேன் ராமனுக்குமகுடம் எ-வ-மெ)

1\. பாதகமலங்களையே நாடி-ஸ்வாமி
பணிந்துப்பிடித்திடுவேன் கூடி-சற்றும்
பந்தமற்ற சிந்தையுற்ற
வந்தணர்கள் வந்து தொழும் பாதா-முனிநாதா

2\. வேதவிதிப்படியிவண்மேவி-தாங்கள்
விதித்தவிதிப்படியேபூவில்-நெறி
விண்டுகலங்கண்டு மனங்
கொண்டுதினந்தொண்டு புரிவோமே-பிரியோமே

3. சிந்தையினினைந்தவகை நீரே-அது
சித்தியாம்படி யருள்செய்வீரே-ஸ்வாமி
சித்த சித்துணர்ந்தநல்ல
சத்துவகுணத்திற் சிறந்தோரே-நிறைந்தோரே ()

வசனம்

சேடி யிங்கு வருவாய்

சுபத்திரை தரு

(ஆ-ஆ-என் காதலியை எ-வ மெ.)

கண்ணிகள்.

1 ஆ, ஆ, ஈதென்னசூது ஆரோ இங்குற்றசாது
ஓ. ஓ, நம்பத்தகாது சேடி, சேடி, சேடி, (ஆ)
2. கள்ளவேடமோயிது கருத்தெவ்வாறறிவது
மெள்ளநம்மில் வந்தது மேவி, மேவி, மேவி (ஆ)
3. சரத்தூணிபபுறங்கொளுந்தழும்புள்ளதோள்களும்
கரத்தில் விற்குறிகளுங் கண்டேன் கண்டேன் கண்டேன்

வசனம்.

சகி, இந்த சன்னியாசியையுற்று நோக்குங்கால் கொற்றவர்க்குறிய குறிகள் காணப்படுகின்றது ஆதலால் இவரை யாரென விசாரிப்போம் வருவாய்

இதுவும் சுபத்திரை வசனம்

ஸ்வாமி, அடிகள் எங்குந் தீர்த்த மாடப்புகினும் தாங்கள் தங்கும் நகரம் எந்த நகரம்.

அருச்சுனன் வசனம்

சுபத்ரா நம் நகரம் இந்திர பிரஸ்த்தம்

சுபத்திரை வசனம்

ஸ்வாமி இந்திரப் பிரஸ்தமானல் அந்நகராள் தர்ம, வீவ, நகுல சகாதேவர் க்ஷேமமெப்படி,

அருச்சுனன் வசனம்

சுகமாகத்தானிருக்கிறர்கள், இருக்கட்டும் இவர்கள் நால்வர்களைமட்டும் விசாரித்து ஆணழகனை அர்ச்சுனராஜனை மறந்ததென்ன காரணம்

சுபத்திரை வசனம்?—சகி, என், அபிப்பிராயத்தை யிவர்க்கு அறிவிப்பாய்

சகி வசனம்:—ஸ்வாமி எங்கள் கோமகளான இவள் அந்த பற்குணற்குரியப் பத்தினியாக வேண்டியவளாதலால் அன்னவரை வினவ வெட்கப்பட்டு மறைத்தனளன்றி மறந்தவளன்று,

அருச்சுனன் வசனம்?—அவ்விதமானால் சரிதான்

சகிவசனம்:—தவசிரேஷ்டரே, தனஞ்சயன் தீர்த்தயாத்திரைக்குச்சென்றனரென்று சிலர்சொல்லக்கேட்டோம் இப்போதவரெங்குளாரென தங்கட்குத்தெரியுமா.

அருச்சுனன் வசனம்:—பாங்கி, பார்த்தன் பலதிசைகளிலுஞ் சென்று தீர்த்தமாடி யிப்போது கோங்கினரும்பைப் போன்றக்கொங்கைகளையுடைய வுங்கள் கோமகள் பொருட்டு ஈண்டு வுங்களிடத்திலேயேதானிருக்கின்றான்.

சுபத்திரை வசனம்:—சகி, இவர்சொல்வதென்ன சந்தேகமாகவிருக்கின்றதே

அருச்சுனன் வசனம்:—சந்தேகமென்ன

அருச்சுனன் சுபத்திரை சம்வாதம்

(மலடிவயிற்று மகன்போலே என்றசந்தம்)

அருச்சுனன்

1. மதிவதனப்பெண்மடமானே—சுக
மதுரமொழிச்சொற்பசுந்தேனே—யுனை
மருவசுகிக்க மனந்தானே—மிகமகிழ்ந்தேனே

சுபத்திரை

மகிழவுமக்கதழகாமோ—மக
ரிஷிகடமச்சி தொழுங்காமோ—வுனை
மருவநினைக்க மனம்போமோ—மதிகுறைவாமோ

அருச்சுனன்

2. மதிகொளிணக்க முடன்யானே—யுனை
மறைவின்மணக்கும் விதந்தானே—தவ
வடிவமெடுத்துப் புகுந்தேனே—வழிபடுமானே

சுபத்திரை

வழிபடுதற்குப் பொருந்தோமே—மன
மருமமனைத்துந் தெரிந்தோமே—யது
வரையிலுமக்குயிர்தந்தோமே—விதிபடியாமே

அருச்சுனன்

3. விதியினமணக்க விழைந்தோனே—யுனை
விஜயனெனக்கொள் மனந்தானே—யினி
வெருவனிஜத்தைப் புரிந்தேனே—வெளிப்படயானே

சுபத்திரை

மிமவுமகிழ்ச்சி யடைந்தேனே—பல
விதமுநினைத்து ளுடைந்தேனே—வுள
விசனமனைத்துங் கடந்தேனே—பதியினளானேன்

அருச்சுனன்

4. பதியிலடுத்துப் பணந்தாம—னினிப்
படைகளெடுத்துப் பிணங்காமுன்—செழும்
பவளவிதழ்த்த ணறுந்தேனுண்—டிடவருவாயே

சுபத்திரை

பரிணயமுற்றிப் பரிந்தாளு—மவ
சரமெனதற்குள் மனந்தாளு—மலப்
படையனெதிர்க்கிற் சினமூளும்—பதரிடலாகா

அருச்சுனன் வசனம்:—மாதரசே, அதுவரை மன்மதாவஸ்தை யை சகிக்கமுடியாது,

தரு

(தையலே யென்னை-என்ற-வ-மெ.)

பல்லவி

அன்னமே யென்னை யணைந்தொருமுத்தந்தருவாய்
அருகினிலித்ததி வருவாய்

சரணங்கள்

இன்னமேன்றடை யென்னைநீ மேசா
இணைப்பிரியாமலின்பசுகங் கூர
சொன்னமேதுரியன்வெட்கி சோர
துவரிதழ்க்கனிரச மளிப்பாய்
தவரிஷியலமனங் களிப்பாய் (அன்)

எதுவந்தாலும் வருக விப்போது
எமனறியாதுயிரொன்றும் போகாது
பதுமைப்போலுளப் பாவாய்மண்மீது
பலபலலீலைகள் புரிந்திட
மலரணைமிசை மனம்பொருந்தி (அன்)

பொதுவசனம்

இவ்விதம் அருச்சுனன்கூறி சுபத்திரைக் கரத்தைப்பிடிக்கதோழிகள் தடுத்துசொல்வது.

தோழிகள் வசனம்

ஐயா, அவசரப்படவேண்டாம் எங்களரசியின் கரகமலத்தை விட்டுவிடும் அன்றேல் அனர்த்தமாய்விடும் அம்மா எங்களுடன் வந்துவிடுவாய்.

பொது வசனம்

இங்ஙனம், அருச்சுனனும் சுபத்திரையும் தனித்தனி விரகதாபமிகுந்து வருந்திவாடுவதைக் கபடநாடகனுகியக்கண்ணன் தேவகிதேவியால் தெரிந்து இதுதான் சமயமென்று தமையனிடமடைந்து இன்று சிவபெருமானுக்கு செய்யுந் திருவிழா வென்று தமையனுடன் நகாஜனக்களையு ம ழைத்துக்கொண்டு அவ்வரனாலயமடைவதையறிவீர்கள்

கண்ணன் தரு

(சித்தாதிதேவர்கள்-எ-வ-மெ)

**கண்ணிகள்**

1. அண்ணு மண்ணுள்சங்க வண்ணுவிண்ணுளந்தக்
கண்ணுயிரம் படைத்தோன்— அருந்திருநா
ளன்பாய்செய்துமுடித்தோம்

2. மண்ணுசைதன்னேடுப் பெண்ணுசைப்பொன்னுசை
நண்ணுதசன்னியாசிபால்—மனதிற்சங்கை
யெண்ணுமல் நாமினிமேல்

3 சொன்னவண்ணமந்த மன்னன்றனக்கேகநம்
பின்னவளைத்தருவோம்—சுகமுடனே
மன்னும்புகழ்ப்பெறுவோம்

4. தன்னகரெங்கனும் பொன்னகரென்னவே
முன்னமலங்கரிப்போம்—நம்மவருக்குஞ்
சின்னமறவுரைப்போம்

5. இன்றுசிவன்விழா வென்றுவழங்குவ
தொன்றுமறியாதுபோல்— இருப்பதுவோ
நன்றுநன்றுப்புவிமேல்

6. சென்றுநாமெல்லோரு மொன்றுக்கூடி யாழி
யின்றுரைவாழீசனை சேவித்து நிலை
நின்றுசெய்வோம்பூசனை

வசனம்.— அண்ணு, நம்மனேர் வருஷப் பிரதிவருஷமும் சிவபெருமானுக்கு செய்யுந் திருவிழாதினம் அத்தினமாச்சுதே சும்மாயிருந்தாலெப்படி

பலராமன் தரு

(ஏனோ நீ தடை செய்குறாய் தம்பி எ-வ-மெ)

பல்லவி

போகலாமினிபுறப்படுவாய் தம்பி

சரணங்கள்.

1. ஏகபோகமாயிலங்கவேநலம்
ஈசன் விழாசெய்ய பிலம் (போ)

2. நாகரீகநம்நகரவாசிகள்
நாடநம்முடன் கூடபுகல் (போ)

3. வேகமாகவே வேண்டியவற்றை
விரைவிற்கொண்டடைவீரிற்றை (போ)

வசனம் :—தம்பி, சிவன் விழாவுக்கு வேண்டிய திரவியங்களை சேகரித்துங்கொண்டு யாவரும் சீக்கிரம் புறப்படுங்கள் செல்வோம்.

அருச்சுனன் தனிவசனம்:—ஆ, இனியான் எப்படி சகிப்பேன் இளங்கொடி சுபத்திரையைக்கூடி யெப்பொழுது சுகிப்பேன், ஹே, இமையோரபதியாகிய எந்தையே தாங்களிந்திராணி சமேதராக இங்ஙனெய்தியெனதிஷ்டப்படி திருமணம் புரிய தங்கள் வரவைப் பிரார்த்திக்கின்றேன்.

சுபத்திரை தனிவசனம்:—கண்ணு, மணிவண்ணு, என தண்ணு என்னுல் விரகதாபத்தை யிளிசகிக்க சாத்தியப்படாது, ஆதலால் இவ்வேளைவிஜயனுக்குமெனக்கும் விவாகத்தைமுடிக்கயான் தங்கள் வரவைப் பிரார்த்திக்கின்றேன்

பொது வசனம்:—கண்ணன் பலராமனிடம் இருப்பவன்போலி ருந்து தங்கையிடம் வந்து சந்தோஷப்படுத்தி தனஞ்யனைப்பார்த்து சொல்வது

கண்ணன் தரு

(இ-ம். இந்துஸ்தான். தா-ம் ஆதி)

பல்லவி

ஏங்காணுமோய் மைத்துனு விதற்குள்ளேபதறலாமா

அநுபல்லவி.

போங்காணுந்திருட்டுவேடம்பூண்டால்பிறரறியலாமா
பாங்காகவதற்குவேண்டும் பான்மையன்றிப்புரியலாமா

சரணங்கள்

1. என்னுடனேபழகிவந்து மின்னமுநீதேரவில்லே [ரெல்லே
யுன்னுடைய மதனபித்த மொழியும்வழியைத்தேடுமுன்
2, என்னைக் காட்டிக்கொடுத்திடவோஇந்தவிதம்நீசெய்தது
அன்னைதேவகிதனக்கு மனைத்துந்தெரிந்துப்போனதிது (ஏ)
3. அண்ணன்பலராமன்கண்டாலனர்த்தத்துக்கிடமுண்டாமே
யெண்ணவேறுகொண்டுசெய்புமென்மதிப்பும்விண்டுப்போமே

கண்ணன் வசனம்:—அர்ச்சுன

அருச்சுனன் வசனம்.—ஏன் மைத்துன.

கண்ணன் வசனம்:—அந்தமட்டும் போதும் நல்ல யோக்கியன்றான்;உனக்கு என்னதான் சொந்தமிருந்தபோதிலும் இத்தனைப் பதட்டமாகுமா.

அர். வ-ம்.—வாஸ்தவந்தான் அடியேன் எத்தனைநாள் இப்படி மன்மதாவஸ்தையில் வாடிவருந்துவது இது தங்களுக்கு தருமந்தானு.

கண்ணன் வசனம்.— அதற்கிப்பொழுது என்ன செய்யச் சொல்லுகின்றாய்

அர். வ-ம்—இன்றேயென்விருப்பப்படி யின்றே விவாகத்தை முடிக்க வேண்டுகின்றேன்

கண் வ-ம்:—பலதேவன் பட்டினவாசிகளெல்லாம் சிவபெருமான் திருவிழாவை மசய்யும்பொருட்டு சென்றிருக்கின்றார்கள், இதுதான்சமயம் என்றாலும் யாரைக்கொண்டு விதிப்படி விவாகத்தை செய்வது

அர். வம்—அதற்கு எனது பிதாவாகிய இந்திரனை யிங்குவர சிந்தித்திருக்கின்றேன்

கண். வ-ம்—சரி, வந்திருக்கின்றன

அர். வ-ம்—அதோ வருகின்றார்பாரும்

# இந்திரன் இந்திராணி சமேதனாய்

## வசிஷ்டராதி வானவருடன்

## மாதவனைத் துதித்து வருவது

### திருப்புகழ் சந்தம்

தனதன தனதன தானதனதன
தனதன தனதன தானதனதன
தனதன தனதன தனாதனதன-தனதா

1. மரகபி மணிமய தேகநமோநம
மறைமுடி தனிலுரை யேக நமோநம
மலர்மகன் மனங்களி போக நமோநம-மகிமீது
மதனச லதிவதி மாய நமோநம
மகிழமு த்தவிய தூய நமோநம
மதிகுல மதலைத னேய நமோநம-வசுதேவன்

2. வரமக னெனவளர் நேம நமோநம
மருவிய தசசத நாம நமோநம
வரமரு ளரிபரந் தாம நமோநம-மலர்மேவு
மகனுத யதுபம நாப நமோநம
மருதிடை விரவிய தேவ நமோநம
மருவடி துளவணி மார்ப நமோநம-மறவாமல்

3. பரகதி தனைதரும் பாத நமோநம
பரவிய யதுகுல நாத நமோநம
பகரரு மருட்பிர சாத நமோநம-பலகாலும்
பருணிதர் துதிபசு பால நமோநம
பவவினை களைபறி சீல நமோநம
பணிபவர் தமதநு கூல நமோநம-படமேய

4. வுரகச யனபிர காச நமோநம
வுவணமி சையொளிறு மீச நமோநம
வுவரி புணர்துவரை வாச நமோநம:வொருதானே
யுலகயின் றமிழ்கனி வாய நமோநம
வுயிர்தொறு முலவுமு பாயநமோ
வுறவு துணையெவையு மாய நமோநம-நெடுமாலே

இந்திரன் வசனம்:—கண்ணு: அனைவரும் நமஸ்கரிக்கின்றோம்

கண்ணன் வசனம்:—தேவராஜே, குந்திவழியின் வந்த நின் மைந்தனாகிய விஜயன் என் பின்னவளை மணந்துக்கொள்ள நின்னை மனஞ்செய்த வண்ணம் நீ வசிஷ்டாதி வானவரோடு வந்தது மெத்தவும் சந்தோஷம் ஆயினும் எனது தமையன் முதல் சகல ஜனங்களும், சுபத்திரையை துரியோதனனுக்குக்கொடுக்க இசைந்திருக்கின்றார்கள், இதுசமயம் அவர்களனைவரும் அரனாலய மடைந்திருக்கின்றார்கள் ஆதலால்: அவர்களீண்டடையாமுன் சீக்கிரந்திருமணத்தை செய்து முடித்து சேனுலகடைவாய்

இந்திரன் வசனம்.—சித்தம் தேவே

இந்திராணியைப்பார்த்து:—பெண்ணே, மணிவண்ணன் தங்கையை மங்கள ஸ்நானஞ்செய்து மணக்கோலம்பூண்டு மணவரைக்குள் வரும்படி செய்வாய்.

அருச்சுனனைப்பார்த்து—மைந்த, நீயும் ஆடையாபரணவலங்கிருதனாய் மாதவன் முதல் வசிஷ்டரையும் வணங்கி வானவரும் வாழ்த்த வன்னிசாக்ஷியாக மாயன்றங்கையை மணங்கொள்வாய்

## அருச்சுனனும் சுபத்திரையும்

### மகபதி முதல் வானவர்களும் ஆசீர்வதிக்க மணங்கொள்வது.

(இ-ம் இந்துஸ்தான் காபி தா-ம். ஆதி.)

சுபத்திரை

1. மன்னுவும்மைக்கண்டுமனதில் மகிழ்வைமூட்டினேன்
மாநிலத்தோரறியமண மாலைசூட்டி னேன்

அருச்சுனன்

மாலையிட்டுமாங்கல்யப்பூண் மகிழப்பூட்டினேன்
மாதேவன்னிசாக்ஷியாக மணத்தைக்கூட்டினேன்

சுபத்திரை

2. கூடியும்மைசுகிக்கமோகங் கொண்டேனுண்மையாய்
கொக்கோகநூல்வரம்பைக்கண்ட குருவேவண்மையாய்

அருச்சுனன்

வண்மையோடிவ்வமியையிதித்து வந்துசேரடி
வானகத்தருந்ததியை வரைந்துப்பாரடி

சுபத்திரை

3. பாரளிக்கும்பார்த்திபாநின்பாதமேகதி
பண்ணார்வேதமுனிவராசிர் பகரவேமதி

அருச்சுனன்

மதிவதனசுந்தரமேநீ வாடிநாம்கூடி
மலரணையின்மருவிசுகிக்க மங்களம்பாடி

கண்ணன்வசனம்:—அருச்சுனா, இனியாலஸ்யமில்லாமல் எனது தங்கை சுபத்திரை ரதசாரத்தியஞ் செய்ய அரண்மனைக் காவலைக்கடந்து இந்திரப்பிரஸ்தமடைவாய்

இதுவுமது:—பொன்னகர்க்கிறைவ, நீயும் நின்னுடன் வந்த வசிஷ்டாதிவானவர்களுடன், வானுலகடைவாய், இதோயானும் எனது தமையனிடம் செல்லுகின்றேன்.

பொது வசனம்

கண்ணபிரான், மீண்டும் தமையனிடம் வந்து நகரிலுள்ள சில காவலாளர் அருச்சுனனோடமர்புரிந்து தோல்வியுற்று பில மடைந்தவர்கேட்க பேரிகைமுழக்குவதை யறிவிப்பது

கண்ணன் பலராமன் சம்வாதம்.

(போம் போம் அப்புறம் போமையா-எ-வ-மெ)

கண்ணன்

1. அண்ணா வென்சும்மாயிருக்கின்றீர்-வந்ததேதீம்பு
கண்ணாகநாம்வளர்த்த கனிஷ்டை சுபத்திரையை
பண்ணான்சன்னியாசிமோசம் பதிதனில்வந்துமதிமிகதுணிந்து

பலராமன்

கண்ணாசொல்லென்னக்காரணம்-கனவுகண்டாயேர
மண்ணாசைப்பொன்னுடனேமாதராசையாவுமே
எண்ணாதசன்னியாசிமேலியம்புகிறாய்பழி யிதுவோநல்வழி

கண்ணன்

2. ஏவலாளரைக்கேளுமே-யெனக்கென்னதெரியும்
காவலுடனிருக்குங் கன்னிகாமாடத்தில்
ஆவலுடனங்கையை யடுத்துதொட்டானுங்கெடுத்துவிட்டானும்

பலராமன்

ஆமாமிம்மோசஞ்செய்தவன்-ஆரவனுகட்டும்
சாமார்த்தியமாய்விண்டு சன்யாசிவேடங்கொண்டு
ஏமாற்றினலவனுவி யிருக்குமாசொல்மெய் எனப்பாயிதுபொய்

கண்ணன் தரு
(பார்ஸ்மெட்டு.)

பல்லவி

அண்ணுமுன்னமேநான் சொன்னேனங்கவனை
யாரோகபடனிவனென்று

சரணங்கள்.

1. எண்ணுமற்போனீரன்று—இங்கு
ஏவாமேற்பழிசொல்வதின்று—அந்த
மண்ணுள் துரியோதனற்கென்று-தங்கள்
மனத்தினினைத்ததுவேநன்று (அண்)

2. விதுரனுக்கினியென்னசொல்வீர்-அன்று
வீணுகவாய்விற்றுவிட்டீர்-அண்ணு
சதிரோடதற்குடன்பட்டீர்-அந்த
சன்னியாசியைநம்பிகெட்டீர் (அண்)

3. தங்கையைக்கொண்டேகினவன்றானே-வல்ல
தனஞ்சயனெனும் பெயரோனே-வெண்
சங்கையேநிகர்த்தவடிவோனே-நல்ல
சமயம்பார்த்து நுழைந்தானே (அண்)

4. என்னலொருக்குற்றமுமில்லை-யிது
வெல்லாமும்மால்வந்ததொல்லை-நான்
சொன்னல் கேட்டீராவென்சொல்லை-யினி
சும்மாயிருப்பதில் பயனில்லை (அண்)

5. நேரினில் நாம்போய்கேட்போம்-என்ன
நீதியை சொல்வான் பாரப்போம்-சென்று
போரினில் ஜயமதைசேர்ப்போம்-சரி
புறப்படுமொருகைப்பார்ப்போம் (அண்)

கண்ணன் விருத்தம்

கெட்டதெல்லாமும் மாலே கேவலப்படுத்திக்கொண்டீர்
திட்டனே வேண்டாமென்றேன் சும்மாய் நீரிருந்து விட்டீர்
சட்டென அவனோடேயாம் சண்டைகள் செய்து மாதை
பொட்டெனத் தருகவேணும் போகலாம் புறப்படண்ணா

வசனம்:—அண்ணா, கெட்டதெல்லாமும்மாலே இனி சும்மா யிருப்பதில் என்னப்பிரயோசனம் சண்டைக்குச் சென்று தனஞ்சயனை வென்று தங்கையை மீட்டுக்கொண்டுவருவோமா

பலதேவன் தரு

(உக்ரமிக்கத்தக்கப்பக்குவமாய் ்T-வ-மெ.)

ஆ-ஆ, என்ன கெர்வமாகட்டுமர்ச்சுனன்றனு-சற்றும்
அச்சமில்லாமலலக்ஷியமாயெண்ணினனு
ஓ-ஓ, நின்னுளவில்லாமல் நண்ணுவானு
உரதானுறுந்திரமோவந்தப்
புரந்தான்வருந்தரமோவவன் (ஆ)

பலராமன் விருத்தம்

கண்ணனே இதுவேயுந்தன் கபடந்தான் நன்குணர்ந்தேன்
திண்ணமாய்ச் சொல்வேனின்று தீரனெப்படி வந்தானோ
எண்ணத்திற் கற்போட்டாயே இதுநலமா உனக்கு
புண்ணிற்கோலிட்டவாறு புக்கிட வருந்தலானேன்

வசனம்

வசனம்:—கண்ணா, இதுவெல்லாம் நின் கபடமாகத்தானிருக்க வேண்டும் இல்லாவிடில் எப்படியவனிங்குவரமுடியும், ஆகட்டும் அவன் திராணியைக் கொஞ்சம் பார்ப்போம் போர்க்கோலங்கொண்டெப்புறப்படுங்கள்.

கண்ணன் தரு

(ராவணத்துரும்பே எ-வ-மெ.)

பல்லவி

கோபத்தைவிடுப்பீர்-கொற்றங்
கூறிசெல்வோரையுந்-தடுப்பீர் தடுப்பீர்

அநுபல்லவி

ஆபத்து நமக்காமல்லாமல் பாருக்குள்
அவனுக்கிலாசொந்த மாருக்கு ஆருக்கு (கோ)

சரணங்கள்

1. போதன்விதித்ததுப் போலவற்காச்சுது
போகட்டுமொழிந்துப்போனதுபோச்சுது
சீதனங்கொண்டினிசெல்லுவோம் பேச்சது
திறம்பிடினமக்கே சேர்ந்திடுமேச்சது (கோ)

கண்ணன் விருத்தம்

கெட்டபால் நல்லதாமோ கேலிக்கேயிடந்தாணுச்சு
இட்டமாய் நாமுமந்த இந்திரப்பிரஸ்தமேகி
மட்டிலா யாருமறிய மணம்செய்து வருதல் நன்றே
தட்டாமல் வாரும்செல்வோம் தளரவேவேண்டாமண்ணு

வசனம்

அண்ணு மிஞ்சிப்போனதற்கென்ன செய்வது கெட்டபால் நல்லதாகுமோபாரும் ஆதலின் நாம் இந்திரப்பிரஸ்தம் சென்று மணமுடித்துவருவோமாக தயங்கவேண்டாம் யாவும் அயன் விதிபோலவே தானடக்கும் சீதனத்துடன் செல்வோம் வாரும்.

பொது வசனம்

இவ்விதம் கண்ணபிரான்கூற பலதேவன் தீர்க்காலோசித்து தேறி இந்திரப்பிரஸ்தமடைந்து அனைவருமறிய விதிப்படி சுபத்திரையை அருச்சுனனுக்கு பாணிக்கிரகணஞ்செய்து அரசர்க்குரிய வரிசைப்படி அபரிமிதமாக சீதனந்தந்து நம்பதிகளை யாசீர்வதித்தனர்.

சபையோர் துதி

(சாதுஜனார்த்தன)

மாதவானந்தகுண லோலா
ஸ்ரீ கோபாலா க்ரீடாலீலா சுகசீலா (மா)

சாதுஜனார்த்தன சர்பராஜமர்த்தன
பாதுகார்த்தருள் மாயா பராங்குச நிர்த்தன
வேதவேதாத்தபு ராதன கண்ணு
வேண்டிப் பணிந்தோம் வாசுதேவா
மானுபாவா நீவா ஜீவா க்ஷரனேவா

வசனம்.

பாலகிருஷ்ணமூர்த்திகே ஜே ! ஜே !

வாழி விருத்தம்

மாமறைமுனிவர்வாழி மதிகதிர் தேவர்வாழி
கோமுறைசெங்கோல்வாழிக்குவலயஞ்செழித்துவாழி
காமுறப்பநுவலாட்டிக் கடைக்கணித்தவர்கள்வாழி
தோமறப்படிப்போர்கேட்போர் சுகமுடன்வாழிவாழி.

O-,89:M7V3,8 (?)

தரு

(ஸ்ரீவைகுந்தவாசாவகிலேசா)

வாழிவாழிவாழி மறையவர்
வாழிவையமிசை எவர்வாழி
ஆழிசூழுலகம் யாவரும்வாழ்க
ஆவலாய்ப் பாவலர் நாவலர்வாழ்க
ஆரியர்கவிவாணர் சீரியர்சுகபாணர்
யாவரும்வாழ்க
அச்சிட்டோர் யாவர்பேர்
அவனியிற் பிரசுரித்தோர்
ஆல் போல் தழைத்து வாழ்க

85892

முற்றும்.

சுபம் சுபம் சுபம்

உ

# புத்தக விளம்பரம்.

| | | |
|---|---|---|
| மா. தங்கவேலு கிராமணியார் திருத்தொண்ட நாடகம் | 0 | 10 |
| புதிய நல்லதங்கா நாடகம் | 0 | 8 |
| டிராமா சூர்ப்பனகை பங்கம் | 0 | 2 |
| பட்டிகாட்டு சோபனம் கும்மி | 0 | 2 |
| சகுந்தன்-சரித்திர மென்னும் ஸ்ரீராமருக்கும் ஆஞ்சனேயர் யுத்த நாடகம் | 0 | 10 |
| விஷ்ணுபுராணம் | 3 | 0 |
| கர்ப சாஸ்திரம் | 1 | 8 |
| கூலிக்கு தாலிகட்டின கதை | 0 | 4 |
| பண்டரிகீர்த்தனை | 0 | 4 |
| ஆறுபாஷை ஒக்கபிலேரி | 0 | 4 |
| நீலி கதை | 0 | 4 |
| இராமலிங்கபிள்ளை அருட்பா ரப்பு | 4 | 0 |
| ஷை கிளேஸ் | 6 | 0 |
| பெண்கள் ஜனனஜாதக பலபோதினி | 0 | 11 |

இப்படிக்கு,

**கைவண்டூர். சு. துரைசாமி முதலியார்**

நெம்பர்-41 சின்னகாஞ்சிபுரம் மலைபாளதெரு

புஸ்தக வியாபா